பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 05 வியாழக்கிழமை (21.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 268

# குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை

# விரைவில் நடத்த அரசு தயாராகிறது

## அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஒகஸ்ட்21

**குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் விரைவில் நடத்தப்படவுள்ளன. அத்ற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது.**

**இந்தத் தகவலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே வெளியிட்டார். " குடாநாட்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளேன்" - என்று அவர் தெரிவித்திருக்கிறார்.**

நேற்று நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துக்கள், தகவல்களைத் தெரிவித்த போதே குடாநாட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்தும் ஜனாதிபதி பிரஸ்தாபித்தார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் நடத்துவதற்காக 2006 ஆம் ஆண்டில் நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டிருந்தன.

எனினும் தேர்தல் திகதி குறித்து அறிவிக்கப்பட்ட பின்னர் கள நிலைமை சீரில்லாத காரணத்தால் தேர்தல் நடத்தப்படவில்லை; அது ஒத்திப்போடப்பட்டிருந்தது.

எனினும் பின்னர் தேர்தலை நடத்தும் பொருட்டு நாடாளுமன்றத்தில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

அதன் மூலம் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் யாவும் ரத்துச் செய்யப்பட்டு புதிதாக நியமனப் பத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அனுராதபுரத்துக்கு படையினர் அழைப்பு

### வன்முறைகளை அடக்குவதற்கு

கொழும்பு, ஓக.21

மாகாணசபைத் தேர்தலையொட்டி அனுராதபுரம் மாவட்டத்தில் தேர்தல் வன்செயல்கள் கட்டுக்கடங்காத நிலைக்கு வந்ததையடுத்து அங்கு உடனடியாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை; நாளையே நடைபெறும்

யாழ்ப்பாணம், ஓக.21

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை நாளை வெள்ளிக்கிழமையே நடைபெறும் என யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடனும் படையினருடனும் கைகோர்த்து தேசத்தைக் காக்க ஜனாதிபதி அறைகூவல்

### மத்திய மாகாண சபை இறுதித்தேர்தல் கூட்டத்தில்

அனுராதபுரம், ஓக.21

எங்கள் தேசத்தைப் பாதுகாப்பதற்கு நான் திடசங்கற்பம் பூண்டுள்ளேன். தாயகத்தை காப்பதற்கு அரசாங்கத்துடனும் வீரமிகு படையினருடனும் மக்கள் கைகோர்க்க வேண்டும்.

எம்பிலிப்பிட்டிய மகாவலி மைதானத்தில் நேற்று மாலை நடந்த வடமத்திய மாகாணசபை பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடபகுதி மக்களும் அச்சமின்றி ஜனநாயக உரிமைகளோடு வாழக்கூடிய பின்னணியை ஏற்படுத்துவது எனது நோக்கம். வடக்கை மீட்கும் முயற்சியில் அரசாங்கம் வெற்றி கண்டு வருகிறது. அதனை முழுமையாக எய்த முடியாதவாறு சில சக்திகளால் தடைகள் உருவாக்கப்படுகின்றன.

ஆவணம் ஒன்றின் ஊடாக தாயகத்தின் உரிமைகள் பயங்கரவாதிகளின் கைகளில் ஒப்படைக் கப்பட்டிருந்த தருணத்தில் இப்போதைய எமது அரசாங்கம் தேசத்தை விடுதலை செய்யும் முயற்சிகளை ஆரம்பித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து கொழும்புக்கு அரிசி ஏற்றி வந்த இலங்கைக் கப்பல் பங்களாதேஷில் மூழ்கியது

### பனாமாக் கப்பல் மோதியதால் 3600 மெ.தொன் அரிசி கடலில்!!

டாக்கா, ஓக.21

கொழும்புக்கு 3600 மெற்றிக் தொன் அரிசியை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த கப்பல் ஒன்று வெளிநாட்டுக் கப்பல் ஒன்றுடன் மோதி மூழ்கி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பங்களாதேஷின் சிட்டாங்கொங் துறைமுகத்தில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இந்த கப்பல் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்திய காக்கிநாடு துறைமுகத்தில் இருந்து அரிசியை ஏற்றி வந்த இலங்கைக் கப்பலுடன், சிட்டாங்கொங் துறைமுகத்துக்கு வெளியே சரக்குகளை ஏற்றுவதற்காக நங்கூரமிடப் படாதிருந்த பனாமா நாட்டுக் கப்பல் மோதியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றக் காவலுக்கு திஸநாயகம் மாற்றம்!

கொழும்பு, ஓக. 21

இதுவரை காலமும் தடுப்புக் காவல் உத்தரவுப் பத்திரத்தின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்திரிகையாளர் கே.எஸ். திஸநாயகம் மற்றும் ஜஸீகரன், அவரது மனைவி ஆகியோர் விளக்கமறியலுக்கு மாற்றப்பட்டனர்.

கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் நேற்று அவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோதே இதற்கான உத்தரவை நீதிவான் விடுத்தார்.

எதிர்வரும் ஐந்தாம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைப்பதற்கு உத்தரவிடப்பட்டது.

இதற்கிடையில் எதிர்வரும் 24ஆம் திகதி திஸநாயகம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் மோசமான கட்டத்தை அடையும் ஆபத்தான நிலையில் தேர்தல் வன்முறைகள்!

### நாளாந்தம் அதிகரிப்பதாக கபே அமைப்புப் புள்ளிவிவரம்

கொழும்பு,ஓக.21

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் இடம்பெற்ற வன்முறைகளை விடவும் அதிகமான அளவு வன்முறைகள் தற்போது வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணசபைத் தேர்தல்களில் இடம்பெறலாம் என்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்பு அச்சம் தெரிவித்துள்ளது.

நாளை மறுதினம் வாக்களிப்பு நடக்கவிருக்கையில் நிலைமை மிக மோசமான கட்டத்தை அடையலாம் எனக் கூறப்படுகின்றது.

நேற்றுக் கொழும்பில் 'கபே' அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோனே மேற்கண்ட அச்சத்தை வெளியிட்டார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் இடம்பெற்ற வன்முறைகளை விடவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு கொட்டாஞ்சேனையில் கான்ஸ்டபிள் வெட்டிக்கொலை

### செவ்வாயன்று இரவு சம்பவம்

கொழும்பு, ஓக. 21

கொழும்பு, கொட்டாஞ்சேனை, ஜம்பட்டா வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் கூரிய ஆயுதம் ஒன்றினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஹெரத் (வயது - 24) என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் சேவை ஸ்தம்பிக்கும் அபாயம் நீங்கியது தேவையான டீசல் கிடைக்க படைத் தளபதி ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக. 21

வடபிராந்திய போக்குவரத்துச் சபை தமது பஸ் சேவைகளை நடத்துவதற்கு ஒரு மாதத்திற்கு தேவையான டீசல் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டுள்ளது.

பலாலி படைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

படைத்தளபதியின் ஏற்பாட்டால் குடாநாட்டில் பஸ் சேவை ஸ்தம்பிக்கும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. டீசல் வாங்குவதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் பணம் இல்லாததால் பஸ் போக்குவரத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஓக.21

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் 13 ஆவது ஆண்டாக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் லீக் முறையிலான தாச்சிச்சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் நவாலி சென்.றோக் விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி இளைஞர் ஒன்றிய விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (1-86)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 21

சுழிபுரம் மேற்கு அம்பாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளியின் மைதானத்தில் இடம்பெறும்.

அம்பாள் சனசமூக நிலையத் தலைவர் ச.சிவானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வோதயத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அ.க. சிவசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (1)

## மரண அறிவித்தல்

### அப்புக்குட்டி தம்பிப்பிள்ளை



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான ,அப்புக்குட்டி தம்பிப்பிள்ளை 19.08.2008 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் இராசலிங்கம், கனகலிங்கம், சண்முகலிங்கம், அமுதலிங்கம், பஞ்சலிங்கம், நாகேஸ்வரி, லோகேஸ்வரி, இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி, தம்பிஜயா, நந்தகுமார், செல்லம்மா, யோகம்மா, தனலட்சுமி, விஜயந்தினி, மாலா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சிதம்பரப்பிள்ளை, சீதாங்கம், தங்கமுத்து, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, வெற்றிவேலு, குமாரசாமி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.08.2008) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.09, முதலியார் லேன்,*
*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
(77302) த.லோகேஸ்வரி (மகள்).







## ஆள்தேவை

பலசரக்கு வாணிப நிலையம் ஒன்றிற்கு ஆண் கணக்காளர், சிட்டை எழுதுநர் தேவை. தேவைப்படின் தங்குமிடம், உணவு வசதி உண்டு.

தொடர்பு:- விளம்பர இல: 3129
மே/பா உதயன்.


## தவறிவிட்டது

யாழ்.ஸ்ரான்லி வீதிக்கும் மானிப்பாய் வைத்தீஸ்வரா சந்திக்கும் இடையில் இலங்கை வங்கி காசோலை (978658) ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர் அருள்விநாயகர் ரேட்ர்ஸ், 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.


## Class

தரம் 1-12 வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar ரும் கற்க விரும்பும் மாணவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பித்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077-1372280
கரன், கோக்குவில் கிழக்கு, கோக்குவில்.


## தவறிவிட்டது

நெற்கொழு ஒழுங்கை, ஊரிக்காடு என்னும் முகவரியைச் சேர்ந்த இரட்ணசிங்கம் ஜனனன் என்பவரது தேசிய அடையாள அட்டை (900773480V) 19.08.2008 அன்று வல்வெட்டித்துறைச் சந்திக்கும்,உடுப்பிட்டி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இரத்தினம் நகைமாளிகை,தெணியம்பை, வல்வெட்டித்துறை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.


## விற்பனைக்கு

*Canon 1215 Photo Copier
*H.P 2600 Colour Laser Printer
*Liaster Generator 3KW
*Asian Ladies Byke (Japan)
*Hoover Floor Polisher
*National T.V 21" (colour)
*Song D.V.D Player

என்பன விற்பனைக்குண்டு.

*தொடர்புகளுக்கு:* 137,பலாலி வீதி, தபால்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி.


## வீட்டின் பின்புறத்துக்கு கூட்டிசென்று வல்வெட்டியில் ஒருவர் சுட்டுக்கொலை

வல்வெட்டியில் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் வீட்டில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த குட்டியன் சிவபாதம் (வயது 46) என்ற சீவல் தொழிலாளியே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

இந்த மரணம் குறித்து பருத்தித்துறை மேலதிக நீதிவான் ஏ.ஜி.அலெக்ராஜா சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார்.

கொலையுண்டவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், கள் இருக்கிறதா எனக்கேட்டபின்னர் வீட்டுக்கு பின்புறமாக அழைத்துச்சென்று சுட்டுவிட்டுத்தப்பிச் சென்றனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (அ-1-218)

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 22.07.2008 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சுப்பன் யோகநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (19.08.2008) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன.

வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (21.08.2008) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.* (75356)

*மனைவி* தனயோகவதி *(யோகம்),*
பிள்ளைகள்.


## DMI இன் கணினிக் கற்கைநெறிகள்

DMI கல்வி நிறுவனமானது, அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கு விசேட கட்டணச்சலுகையை வழங்குகின்றது.

- Diploma in Microsoft Office
- Diploma in Computerized Accounting
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip. in Web Designing & Development
- Dip. in Video Production & Multimedia



**Tally** யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக எம்பளப்பட்டியல் மற்றும் VAT கணக்குகளையும் (Sri Lanka, India & British Style) உள்ளடக்கிய முழுமையான Tally9 கணக்கீட்டு மென்பொருள் கற்கைநெறி

GIT (A/L), ICT (10 & 11) சிறார்களுக்கான பயிற்சி நெறிகள்

ஒவ்வொரு கற்கைநெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்: 30/08/2008 , 01/09/2008 , 06/09/2008 - Time 10.00 a.m.

**DMI COMPUTER EDUCATION**
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
INFORMATION TECHNOLOGY DIVISION OF DMI


## மரண அறிவித்தல்

### மாணிக்கம் இராசரத்தினம் (லோகேஸ்வரன்)

(இலங்கை சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரும், தீண்டாமை ஒழிப்பு வெகு ஜன இயக்கத் தலைவரும், வளர்பிறை சனசமூக நிலையத்தின் தலைவரும்)



வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும், மயிலணி வடக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இராசரத்தினம் நேற்று (20.08.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சரஸ்சம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடேசு மற்றும் குணமணி தம்பதியினரின் அன்பு மருமகனும், கருணாவதி (கருணம் - சுவிஸ்)யின் அன்புக் கணவரும், சறோஜினி (டென்மார்க்), ராயூ (லண்டன்), அனுரா (தயாளன் - சூராவத்தை), ஸ்ராலின் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளனின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2008) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சூரவத்தை,*
*சுன்னாகம்.* (77361)

தகவல்:


## Special Promotion .......

**Pentium 4 Computer**
Intel Celeron1.8 Ghz Dual Core Processor
Fox Conn 945 Mother Board
Kingston 512MB Ram
Sata 40GB Hard Disk
Samsung 15" CRT Monitor
ATX Casing
Samsung CD Rom
PS2 Keyboard & Mouse
35,500/=
1 - 3 Year Warrenty

**Pentium 4 Computer**
Intel Celeron1.8 Ghz Dual Core Processor
Asus P5GCMX 1333 Mother Board
Kingston 512MB Ram
Sata 80GB Hard Disk
ViewSonic 15" CRT Sliver Black Monitor
ATX Casing
Samsung 20x DVD R/W
PS2 Keyboard & Mouse
38,000/=
1 - 3 Year Warrenty

**Pentium 4 Computer**
Intel Celeron 3.0Ghz Processor
Asus P5GC - MX1333 Mother Board
Kingston DDR11 1GB Ram
Sata 160GB Hard Disk
View Sonic 15" CRT Sliver Black Monitor
ATX Casing
Samsung 20x DVD R/W
PS2 Keyboards & Mouse
40,000/=
1 - 3 Year Warrenty

**Pentium 4 Computer**
Intel Pentium 2.0Ghz Dual Core Processor
GigaByte 945GCM Mother Board
Kingston DDR11 1GB Ram
Sata 160GB Hard Disk
15" LCD Monitor
ATX Casing
Sony DVD R/W
PS2 Keyboards & Mouse
Speakers
51,500/=
1 - 3 Year Warrenty

**Pentium 4 Computer**
Intel Pentium 2.0Ghz Dual Core Processor
Asus P5GC - MX1333 Mother Board
Sata 250GB Hard Disk
Kingston DDR11 2GB Ram
Samsung 17" CRT Flat Monitor
ATX Casing
Samsung 20x DVD R/W
Keyboard & Mouse
Speakers
52,000/=
1 - 3 Year Warrenty

**ACCESSORIES**
Power Supply - 1,800/=
Cannon Lide25 Scanner - 5,800/=
250GB Sata Hard Disk - 6,400/=
Kingston 1GB Ram - 2,600/=
Laptop Multi Charger - 3,600/=
CD R/W - 2,600/=
Samsung Laser jet Printer - 12,900/=
Pen Drive Capture card - 8,500/=
Usb to Ps2 Conventer - 150/=
DVI Conventer - 600/=
Kingston 8GB Pendrive - 4,250/=

THIS OFFER FOR ONE WEEK

**MINE NOTE BOOK.**
Processor:Intel Atom N270 1.6GHz
Ram:1GB DDR II 667
Hard:Disk 80GB SATA
VGA:Intel Graphics Media Accelerator Intergraded 128
Screen:10" LCD panel
Orignal Windows XP Hme Edition
4-in-Integrated Digital - Media Reader 3USB 2.0
1 External VGA monitor
1 RJ-45
1 Microphone in
1 Headphone/line-out
Cable docking connector
Wi - Fi / Blue Tooth
1.3 MP Cam
1 Year Warrenty
74,000/=

**MP4 PLAYERS**
Orange



• 2 GB (Expand 2 GB)
• Camera • FM Radio
• MP3 • Games
• Voice Recording
12,500/=
• USB Cable • Power Charger
• Head Phone • Driver CD

**MUSIC WORLD & COMPUTERS**
114 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554.
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாராளமாகப் பொருள்கள் கிடைத்தாலும் விலைகளோ எட்டமுடியாத உச்சத்தில்

## யாழ்ப்பாணத்தில் நுகர்வோர் படும்பாடு

யாழ்ப்பாணம்,ஒக.21

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் போதியளவு எடுத்துவரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றபோதும் யாழ்.நகர வர்த்தக நிலையங்களில் அவை அதிகரித்த விலைகளிலேயே விற்பனை செய்யப்படுகின்றன என நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதிக விலையில் பொருள்கள் கிடைக்கின்றபோதும் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குடாநாட்டு மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் போதியளவு பொருள்கள் எடுத்துவரப்படுவதாக அரச உயர் அதிகாரிகள் தகவல்கள் வெளியிடுகின்றனர்.

எனினும் இந்த உணவுப் பொருள்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன.

குடாநாட்டு மக்கள் பொருளாதார ரீதியாகப் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள இக்காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் இவ்வாறு அதிகரித்துள்ளதால் பல குடும்பங்கள் பட்டினி அவலத்தை எதிர்கொள்வதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தனியார் வர்த்தக நிலையங்களில் குத்தரிசி கிலோ 135 ரூபா தொடக்கம் 110 ரூபா வரையும், தீட்டல் பச்சை அரிசி 120 ரூபாவிற்கும், சம்பா அரிசி 111 ரூபாவிற்கும், வெள்ளைப் பச்சை அரிசி 90 ரூபா விற்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

கோதுமை மா கிலோ 95 ரூபாவிற்கும் சீனி கிலோ 85 ரூபாவிற்கும், மிளகாய் 250 ரூபாவிற்கும், மல்லி 350 ரூபாவிற்கும், உள்ளி 200 ரூபா முதல் 240 ரூபா வரையும் பயறு 160 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

பால்மா வகைகளில் அங்கர் 300 ரூபாவிற்கும், நெஸ்பிறே 350 ரூபாவிற்கும், லக்ரோஜன் 350 ரூபாவிற்கும், லக்ஸ்பிறே 285 ரூபாவிற்கும், மில்கறோ 180 ரூபாவிற்கும் மண்ணெண்ணெய் லீற்றர் 100 ரூபாவிற்கும், பெற்றோல் லீற்றர் 180 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

லக்ஸ் சவர்க்காரம் 35 ரூபாவிற்கும், சன்லைட் 32 ரூபாவிற்கும், பருப்பு 150-160 ரூபாவிற்கும், மஞ்சள், பருப்பு 200 ரூபாவிற்கும், சாக் கரை 130-140 ரூபாவிற்கும், கடலை 170 ரூபாவிற்கும், உழுத்தம் பருப்பு 130 ரூபா விற்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (202-111)

# கோப்பாய் பிரதேசத்தில் மேலும் 2 அபிவிருத்தித் திட்டங்கள்

கோப்பாய்,ஒக.21

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேலும் 2 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கென ஒன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

உரும்பிராய் சென்.மைக்கல் சனசமூக நிலையத்தின் புனரமைப்பிற்கு ஒரு லட்சம் ரூபாவும், இருபாலை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கென 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே 39 திட்டங்கள் இப்பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-72)

# யாழ்.கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் 150 மில்லியன் ரூபா கடன் உதவி

யாழ்ப்பாணம்,ஒக.21

யாழ்.கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கென அரசு 150 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்கவுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இந்தக் கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குப் போதுமான நிதி இல்லை என அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்றன.

இவ்விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற வாழ்க்கைச் செலவுக் கூட்டத்தில் முன்வைத்தார். இதையடுத்து 150 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்க திறைசேரி முடிவு செய்துள்ளது.

சீனி, பால்மா, கோதுமை மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202)

# மண்டைதீவுக்கான பஸ் சேவை சீரில்லை; பிரதேச மக்கள் போக்குவரத்துக்குச் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக.21

யாழ். நகரிலிருந்து மண்டைதீவுக்கான போக்குவரத்துச் சேவை சீரின்றி நடைபெறுகின்றது. இதனால் பிரதேச மக்கள், சிரமங்களின் மத்தியிலேயே பயணம் செய்ய வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.நகரிலிருந்து மண்டைதீவுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையினர் நாள் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் மட்டுமே சேவையை நடத்தி வருகின்றனர். ஏனைய நேரங்களில் தனியார் மினிபஸ் சேவையையே பிரதேச மக்கள் நம்பியுள்ளனர்.

இந்நிலையில் தனியார் மினிபஸ் சேவை சீராக நடைபெறாததாலும் சில நாள்களில் முற்றாகத் தடைப்படுவதாலும் பயணிகள் அவலத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

மண்டைதீவில் இருந்து ஊர்காவற்றுறை- யாழ்.வீதியில் உள்ள மண்டைதீவுச் சந்திவரை 6 கிலோ மீற்றர் தூரத்தை கால் நடையாகவே பல நேரங்களில் பயணிப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரதேச மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையை நீக்க இலங்கை போக்குவரத்துச் சபையினரின் சேவை விரிவுபடுத்தவேண்டும் அல்லது தனியார் போக்குவரத்துச் சேவை சீராக நடத்தப்படவேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-302)




இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவு, அசாதாரண சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வீட்டுப் பாவனைப் பொருள்களை வழங்கியது.

கோப்பாய் பிரிவின் செயலாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா பாதிக்கப்பட்ட ஒருவருக்குப் பொருள்களை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். அருகில் பிரிவு அதிகாரிகளும் காணப்படுகின்றனர். (படம்: லக்ஸ்மன்)

# மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை இன்று வைபவரீதியாக ஆரம்பம்.

நவாலி,ஒக.21

ஆனைக்கோட்டையில் புதிதாக அமைக்கப்பட்ட மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை இன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

காலை 9 மணிக்கு புதிய கட்டடத்தில் பால் காய்ச்சும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயத்திலிருந்து சுவாமிப் படங்கள் எடுத்துவரப்பட்டு வைபவ ரீதியான நிகழ்வுகள் இடம்பெறும்.

இவ்வைத்தியசாலையின் திறப்பு விழா எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறுமென்று வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்துள்ளனர். (202-100)




# வடமராட்சி வடக்கில் தொழிற்பயிற்சி நெறிகள்

வடமராட்சி,ஒக.21

யாழ்.மாவட்ட தொழிற்றுறைத் திணைக்களம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 4 தொழிற்பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளது.

'நெக்டெப்' நிறுவனத்தின் நிதியுதவியின்கீழ் இப்பயிற்சி நெறி நடைபெறவுள்ளன. வல்வெட்டித்துறையில் வீட்டு மின்னிணைப்புப் பயிற்சி, பருத்தித்துறையில் அலுமினியம் பொருத்துதல் பயிற்சி, பொலிகண்டி கிழக்கில் அழகுக்கலைப் பயிற்சி, வியாபாரி மூலை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் 'பற்றிக் பிறின்றிங்' பயிற்சி ஆகியவை நடத்தப்படவுள்ளன.

இதேவேளை யாழ்.மாவட்ட தொழிற்றுறைத் திணைக்களத்தால் மாகாண அபிவிருத்தி நன்கொடை நிறுவனத்தின் நிதிஉதவியின்கீழ் கணனி மென்பொருள் பயிற்சி நெறி, வெளிஇணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சி ஆகிய பயிற்சிகள் இப்பிரிவில் நடத்தப்பட்டுள்ளன. மாகாண அபிவிருத்தி நன்கொடை நிறுவனத்தின் நிதி உதவியால் 'ஸ்கிரின் பிரின்றிங்' பயிற்சி நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் யாழ்.தொழிற்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (202-236)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக.21

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் பணியாற்றும் அதிபர்களுக்கான செயலமர்வும் கருத்தரங்கும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாடசாலைக் கலைத்திட்டத்தில் இணைக்கப்படவுள்ள அனர்த்த முகாமைத்துவ எண்ணக்கரு மற்றும் செயன்முறை தொடர்பான பயிற்சிகள் இச் செயலமர்வில் வழங்கப்படவுள்ளன என யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (202-302)

* * *

யாழ்ப்பாணம்,ஒக 21

பெற்றோர்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அச்சுவேலியில் வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அச்சுவேலியில் உள்ள இராச மாணிக்கம் கல்யாண மண்டபத்தில் படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

யாழ்.கல்வியக் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தயாரிப்பில், கமலநாதனின் நெறியாள்கையில் சி.எச்.ஏ.நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட 'வெற்றிக்கு வழி' என்னும் குறுந்திரைப்படமே இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளது.

கல்வி விழிப்புணர்வில் ஓர் அங்கமாக ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில் பெற்றோர்களுடன் மாணவர்கள், ஆசிரியர்களும் கலந்து பயனடையமுடியும் என யாழ். கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (202-302)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.21

யாழ். கூட்டுறவுச் சபை நடத்தும் 86ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவனும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீடப் பீடாதிபதி க.தேவராஜா வும் கலந்துகொள்வர். (202)

# சிறுப்பிட்டிப் பாலம் புனரமைக்கப்படுகின்றது

கோப்பாய்,ஒக.21


யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள சிறுப்பிட்டிப் பாலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை இத்திருத்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

வெள்ளநீர் வடிகாலமைப்பு சீர்செய்யப்படுவதால் மழை காலத்தில் வெள்ளநீர் தேங்கும் அபாயம் நீங்கியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். (202-72)

# தன்னை அறியாத மனிதன்

மனிதன் தன்னைச் சுற்றி உலக முழுவதும் பலவகைப்பட்ட வடிவங்களைக் காண்கிறான். பலவகைப்பட்ட இயல்புடைய பொருள்களையும் காண்கிறான். பலவகைப்பட்ட சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் புரிந்துகொள்கிறான். எவ்விதத்திலும் ஆராய்ச்சி, பரிசோதனை இவற்றில் குறைவில்லை. ஒவ்வொன்றையுமே அவன் ஆராய்ச்சி செய்கிறான். அவன் ஆராய்ச்சி செய்யாத, பரிசோதனை செய்யாத விஷயம் எதுவுமில்லை. ஆனால், அனைத்தையும் கூர்ந்து கவனிக்கின்ற, ஆராய்ச்சி செய்கின்ற, பரிசோதனை செய்கின்ற இந்த மனிதன், தான் யார் என்பதை மட்டும் அறியவில்லை.



பிரதமர் சர்ச்சில், ஒருசமயம், அனைத்தையும் ஆராய்ந்த பின், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் பறைசாற்றினார். மனிதன் அனைத்தையும் வெற்றி கொண்டான். தன்னை மட்டும் வெற்றிகொள்ளவில்லை. மனிதன் தன்னைச்சுற்றி அனைத்தையும் பார்த்துக்கொள்ள முடிகிறது. ஆனால் தன்னைப்பற்றி அறிந்துகொள்ள மட்டும் அவன் முயற்சி செய்வதில்லை. நீ யார் என்பதை அறிந்துகொள்ளாதபோது, பிற வற்றை ஆராய்ச்சி செய்து அறிந்துகொண்டு என்ன பயன்? உலகம் முழுவதையும் பற்றித் தெரிந்து கொண்டு...

சாயி சிந்தனை

# கருத்து வெளியிட்டவர் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரே

யாழ்ப்பாணம்,ஒக.21

முன்பள்ளிகள்தான் பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டிற்கு அடித்தளம்; கற்பித்தலில் ஈடுபடுவோர் அதனை நற்பணியாகக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு கருத்து வெளியிட்டவர் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு.சந்திராதேவி.

கடந்த 29.07.2008 உதயனில் வெளியான செய்தியின் தலையங்கத்தில் பிரஸ்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கூறுகிறார் எனத் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரஷ்ய வீராங்கனை சாதனை



மராத்தான் நீச்சல் போட்டியில் முதல் தங்கப் பதக்கத்தை ரஷ்ய வீராங்கனை லாரிசா இல்சன்கோ வென்றுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகள் வரலாற்றில் முதல் முறையாக நீச்சல் போட்டியில் 10 கிலோமீற்றர் மராத்தான் போட்டி பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



இந்தப் போட்டியில் ரஷ்ய வீராங்கனை லாரிசா இல்சன்கோ, முதல் இடத்தைப் பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். அவர், 1:59:27.7 விநாடிகளில் 10 கிலோமீற்றர் தூரத்தை முந்திக் கடந்தார். இதன்மூலம் அவர், மராத்தான் நீச்சல் போட்டியில் முதல் தங்கப்பதக்கத்தை வென்றார். பிரிட்டனைச் சேர்ந்த மற்றொரு வீராங்கனை காசன் வெண்கலப்பதக்கத்தை வென்றார்.

# ஷரத் கமல் ஏமாற்றம்



டேபிள் டெனிஸ் போட்டியில் இந்திய வீரர் ஷரத் கமல் 2 ஆவது சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

ஷரத் கமல் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறி இருந்தார்.இந்நிலையில் நேற்று நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டத்தில் அவர் ஆஸ்திரிய வீரர் சென் வீசிங்கோடு மோதினார்.

இந்த மோதலில் அவரால் ஆஸ்திரிய வீரரின் சவாலை திறம்பட சந்திக்க முடியவில்லை. அவரால் ஒரு செற்றை மட்டுமே கைப்பற்ற முடிந்தது.

இதனையடுத்து அவர் தோல்வியைத் தழுவினார். காமன் வெல்த் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஷரத் கமல்,ஒலிம்பிக் போட்டிகளுக்காக தீவிர பயிற்சி மேற் கொண்டிருந்தார்.பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்த அவர்,2ஆவது சுற்றில் தோல்வி அடைந்தது இந்திய ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

# அபிநவ் பிந்திராவுக்கு மத்திய அரசால் 50 இலட்சம்



ஒலிம்பிக் தங்கம் வென்ற அபிநவ் பிந்திராவுக்கு 50 இலட்சம் ரூபா ஊக்கப்பரிசு வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்தப் பரிசுத் தொகை எதிர்வரும் 29 ஆம் திகதி புதுடில்லி யில் நடைபெறும் அர்ஜூன விருது வழங் கும் நிகழ்ச்சியில் வைத்து வழங்கப்படவுள்ளது.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை யில் இதைத் தெரிவித்துள்ளது.

சர்வதேச போட்டிகளில் வெற்றிபெறுவோருக்கு சிறப்பு விருது வழங்கும் திட்டத் தின் கீழ் இந்தப் பரிசுத் தொகை வழங்கப்படு கின்றது. இதற்கான தொகையை 30 இலட்சத் திலிருந்து 50 இலட்சமாக அதிகரிக்குமாறு பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரிடம் விளையாட்டுத் துறை அமைச்சர் எம்.எஸ்.ஸ்கில் வேண்டுகோள் விடுத்ததையடுத்து பரிசுத் தொகை உயர்த் தப்பட் டுள்ளது.

அதேபோல் வெள்ளி வெல்வோருக்கான பரிசுத் தொகை 18 இலட்சத்திலிருந்து 30 இலட்சமாகவும் வெண்கலம் வெல்வோருக்கான பரிசுத் தொகை 2 லட்சத்திலிருந்து 20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)

| நிலை | நாடு | தங். | வெள். | வெண். | மொ. |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 44 | 14 | 19 | 77 |
| 2 | அமெரிக்கா | 26 | 26 | 27 | 79 |
| 3 | பிரிட்டன் | 16 | 10 | 10 | 36 |
| 4 | ரஷ்யா | 12 | 14 | 18 | 44 |
| 5 | ஆஸ்திரேலியா | 11 | 12 | 12 | 35 |
| 6 | ஜேர்மனி | 11 | 08 | 09 | 28 |
| 7 | கொரியா | 08 | 10 | 06 | 24 |
| 8 | ஜப்பான் | 08 | 06 | 09 | 23 |
| 9 | இத்தாலி | 06 | 07 | 07 | 20 |
| 10 | உக்ரைன் | 05 | 04 | 08 | 17 |
| 11 | பிரான்ஸ் | 04 | 12 | 14 | 30 |
| 12 | நெதர்லாந்து | 04 | 05 | 04 | 13 |
| 13 | ருமானியா | 04 | 01 | 03 | 08 |
| 14 | ஸ்பெயின் | 03 | 05 | 02 | 10 |
| 15 | போலந்து | 03 | 04 | 01 | 08 |
| 16 | நியூசிலாந்து | 03 | 01 | 05 | 09 |
| 17 | சொலவாக்கியா | 03 | 01 | 00 | 04 |
| 18 | கனடா | 02 | 06 | 05 | 13 |
| 19 | கென்யா | 02 | 04 | 02 | 08 |
| 20 | செக் | 02 | 03 | 00 | 05 |
| 20 | ஜமெய்க்கா | 02 | 03 | 00 | 05 |
| 22 | டென்மார்க் | 02 | 01 | 03 | 06 |
| 22 | தென்கொரியா | 02 | 01 | 03 | 06 |
| 24 | எதியோப்பியா | 02 | 01 | 00 | 03 |
| 25 | சுவிற்சர்லாந்து | 02 | 00 | 03 | 05 |
| 26 | ஜோர்ஜியா | 02 | 00 | 01 | 03 |
| 27 | கியூபா | 01 | 05 | 05 | 11 |
| 28 | பெல்றாஸ் | 01 | 03 | 07 | 11 |

Beijing 2008

# பளு தூக்குதல் நிகழ்வில் பெலாரஸ் வீரர் சாதனை



பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் செவ்வாய்க் கிழமை நடந்த பளு தூக்குதல் ஆண்கள் பிரிவில் 105 கிலோ உடல் எடைப்பிரிவில் பெலாரஸ் வீரர் ஆந்த்ரே அர்மானு 3 உலக சாதனை படைத்தார். 20 வயதான அவர், 'ஸ்னாட்ச்' முறையில் 200 கிலோவும், 'கிளீன் அண்ட் ஜெர்க்' முறையில் 236 கிலோவுமாக மொத்தம் 436 கிலோவைத் தூக்கினார். இந்த மூன்றும் உலக சாதனையாகும். முன்னாள் உலக சாம்பியன் டிமித்ரி கோகோவ் (ரஷ்யா) [illegible] எடை தூக்கி வெள்ளிப் பதக்கமும் [illegible] கோவ் 420 கிலோ தூக்கி வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

# எஸ்டோனிய வீரருக்கு 'டிஸ்கஸ்' தங்கம்

உலக சாம்பியனான எஸ்டோனியாவைச் சேர்ந்த ஜெர்ட் கான்டர், டிஸ்கஸ் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

போலந்து வீரர் மலாக்கோ வஸ்கி வெள்ளிப்பதக்கத்தை வென்றார். முதல் 3 சுற்றுக்கள் முடிவில் போலந்து வீரரே முன்னணியில் இருந்தார். எனினும் எஸ்டோனிய வீரர் கான்டர் அதிக தூரத்திற்கு தட்டெறிந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

அவர் 68.82 மீற்றருக்கு தட்டெறிந்தார். போலந்து வீரர் 67.32 மீற்றர் தூரத்திற்கு தட்டெறிந்தார்.

லித்துவேனியா நாட்டைச் சேர்ந்த அலெங்கா வெண்கலப்பதக்கத்தை மட்டுமே வெல்ல முடிந்தது. அலெங்கா, கடந்த 2 ஒலிம்பிக் போட்டிகளிலும் தட்டெறிதலில் (டிஸ்கஸ்) தங்கப்பதக்கத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 3ஆவது முறையாக தங்கப்பதக்கத்தை வெல்லும் அவரது கனவு நிறைவேறவில்லை. எஸ்டோனியா இதன் மூலம் பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியில் முதல் தடகள பதக்கத்தை வென்றுள்ளது.

# தங்கத்தை வென்ற அமெரிக்கக் குதிரை



பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் குதிரையோட்டம் மட்டும் ஹாங்காங்கில் நடத்தப்பட்டு வருகிறது. திங்கட்கிழமை நடந்த குழுப்பிரிவுக்கான போட்டியில் அசுர வேகத்தில் குதிரையைச் செலுத்துகிறார் அமெரிக்காவின் பீஸிமேடன் . இப்பிரிவில் அமெரிக்கா தங்கப் பதக்கத்தை வென்றது.

# ஹார்பருக்குத் தங்கம்



பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டுதல் போட்டியில் அமெரிக்க வீராங்கனை டான் ஹார்பர் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய வீராங்கனை சல்லி மெக் லீலனை வீழ்த்தி அவர் தங்கப்பதக்கத்தை வென்றார்.

ஆஸ்திரேலிய வீராங்கனையால் வெள்ளிப் பதக்கத்தை மட்டுமே வெல்ல முடிந்தது. கனடா வீராங்கனை பிரிஸ்கிலா லோபஸ் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

அதே நாட்டைச் சேர்ந்த ஸ்கிலிப், பிரிஸ்கிலாவோடு சமமாக ஓடி வந்து கோட்டைத் தொட்டார். பின்னர், போட்டோ பினிஷ் அடிப்படையில் பிரிஸ்கிலாவுக்கு வெண்கலப் பதக்கம் வழங்கப்பட்டது.

1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக கனடா தடகள வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

இந்த போட்டியில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனை லோலோ ஜோன்ஸ் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அவரை பின்னுக்கு தள்ளி டான் ஹார்பர் தங்கப்பதக்கத்தை வென்றார். ஜோன்ஸ் 7ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டார்.

# மல் யுத்த வீரர் சுஷில் குமாருக்கு என்னாச்சு?

பீஜிங் ஒலிம்பிக்கில் இந்திய மல்யுத்த வீரர் சுஷில்குமார், உக்ரைன் வீரருடன் தோல்வியடைந்து வெளியேற்றப்பட்டார்.

பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா சார்பில் மல்யுத்தப் பிரிவில் 3 வீரர்கள் பங்கேற்கின்றனர். இதில் யோகேஸ்வர்தத் செவ்வாய்க்கிழமை காலிறுதியில் தோல்வியைத் தழுவிக் கொண்டார். அவர் யப்பான் வீரரிடம் போட்டயிட்டுத் தோல்வி அடைந்தார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற 66 கிலோ பிரீஸ்டைல் பிரிவில் இந்தியாவின் சுஷில்குமார், உக்ரைன் வீரர் ஆன்ட்ரி டாட்னிக்கோடு மோதினார். அவர் முந்தைய ஆட்டத்தில் பங்கேற்காமலேயே அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். அவரோடு மோத இருந்த வீரர் கடைசி நேரத்தில் விலகிக் கொண்டார்.

எனினும், உக்ரைன் வீரரை சுஷில்குமாரால் வீழ்த்த முடியவில்லை. அவர் 38 எனும் கணக்கில் தோல்வியடைந்தார். இதனையடுத்து, அவர் பதக்க சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தார். மல்யுத்த போட்டியில் இந்திய வீரர் ராஜீவ்தோமர் மட்டுமே மிஞ்சியிருக்கிறார். அவர் 120 கிலோ எடை பிரிவில் பங்கேற்க உள்ளார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொன்மையும் வரலாற்று சிறப்பும் மிக்க சுழிபுரம் சுயம்புநாத சிவாலயம்

ஈழத்தமிழ் திருநாட்டின் சிரசு போல் விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் மேற்கு வட்டத்துள் வடமேற்குச் சமுத்திரக் கரையோரம் அமைந்திருக்கும் நிலப்பரப்பின் பெயர் ''சம்பில் துறை'' பண்டைய காலந் தொடக்கம் இக்காலம் வரை இப்பெயர்



மங்காது இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன் சம்பில்துறை பட்டினமாக மிளிர்ந்தபோது, இங்கு வாழ்ந்த வணிகச் செட்டியார்கள் துறைமுகத்தை சிறப்பாக வைத்திருந்தார்கள். எனவே இங்கு முன்னரே ஓர் ஆலயம் இருந்திருக்க வேண்டும்.

சம்பில்துறையில் அமைந்திருந்த ''சுயம்புநாதஷேத்திரம்'' இவர்களின் காலத்திற்கு முற்பட்டதென்பதை தட்சணகைலாச புராணம் மூலம் நாம் தெரிந்து கொள் ளலாம்.

செட்டியார்மார் காலத்தில் சுயம்புநாத ஷேத்திரத்தின் பெயர் மருவி சம்புநாதசுவாமி என்று ஆகிவிட்டது. இந்தப் பெயருடனேயே இவ்வாலயம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நின்று நிலவி வருகின்றது.

### சம்பில்துறை

சம்பில்துறைப்பட்டினம் அன்று பஞ்ச பூதங்களின் சீற்றத்துள்ளாகி சமுத்திரத்தோடு சங்கமமாகி விட்டதென்பது வரலாறு. தென்னிந்தியக் கடற்கரையில் இருந்த காவிரிப்பூம்பட்டினம் சமுத்திரத்துடன் சங்கமமானது போல இதுவும் நடைபெற்றிருக்க வேண்டும்.

### சங்கமித்திரை வருகை

மூன்றாம் நூற்றாண்டில் இளவரசி சங்கமித்திரை தன் பரிவாரங்களுடன் வெள்ளரசுக் கிளைகளோடு தென்னிந்தியாவிலிருந்து வந்து இறங்கிய இடம் சம்பில் துறை என்று கருதப்படுகின்றது.

**-காந்தன்.**

வந்த யாத்திரிகர்கள் இங்கு தங்கி இளைப்பாறிய பொழுது துறைமுகத்தை அலங்கரித்து நின்ற சம்புநாத சிவாலயத்தை நிச்சயம் தரிசனம் செய்திருப்பார்கள். இதிற் சந்தேகத்திற்கு இடமில்லை.

அன்றைய சம்பில் துறைமுகப் பட்டணம் காலப்போக்கில் இயற்கையின் சீற்றத்தினாலும், கடலரிப்பினாலும் மறைந்து போக கடற்கரையில் அமைந்திருந்த சம்பு நாத கேதீஸ்வரர் ''சிவலிங்க சொரூபம்'' இடம் மாறியது.

அன்று இப் பிரதேசத்தில் செல்வந்தர்களாக வாழ்ந்து வந்த சைவச் செட்டியார்களால் சொரூபம் எடுத்துவரப் பெற்று கரையிலிருந்து அரைமைல் தூரத்திற்கு இப்பால் வயற்கரையில் ''சாத்தா வோலையில்'' ஸ்தாபனம் ஆனது. இதனை

## அடுத்தமாதம் 4ஆம் திகதி குடமுழுக்கு

அக்காலத்தில் வாழ்ந்த மூதாதையர்களால் பிற்கால சந்ததியினருக்கு வழங்கப்பட்டுள்ள கர்ண பரம்பரைக் கதைகளில் இருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது.

சைவசமய பதினெண்புராணங்களுள் ஒன்றாகிய தட்சண கைலாச



தற்போது அமைக்கப்பட்டு வரும் ஆலய மூலஸ்தானத்தின் தோற்றம்.

புராணத்தில் ''சுயம்புநாதர்'' படலம் இதனை விரித்துரைக்கின்றது. அருள்மிகு சுயம்புநாதர் சிவாலயம் ''சம்பில்துறை''யில் இருந்தது என்பதை மறைக்கவோ மறுக் கவோ முடியாது.

### சம்பில்துறை அன்றும் இன்றும்

பண்டைக்கால வரலாற்றில் தென்னிந்தியாவிலுள்ள செட்டி நாட்டு செட்டிமார்கள் காவிரிப் பூம்பட்டிணத்தில் பல தேசத்தவர்களுடனும் பண்டமாற்று வாணிபத் தொடர்பு கொண்டு வாழ்ந்தனர். அவர்களின் சந்ததியினரே சம்பில் துறைப் பிரதேசத்திலும் ஆதிக்கம் செலுத்துவோராக இருந்திருக்கின்றனர்.

இதனைவிட இந்தத் துறை முகமடங்கிய ஊரின் பெயர் அன்று சோழபுரம் என்றிருந்து, பின்பு திரிபுபட்டுச் சோழியபுரமென மாறி இன்று சுழிபுரமாயிற்று. அன்று சோழியபுரம் என விளங்கிய பிரதேசம் இன்று ஆறு கிராமங்களா கப் பிரிந்துள்ளது. ஒவ்வொன்றுக் கும் ஒவ்வொரு கிராமசேவையா ளர் உளர்.

அன்றைய சோழியபுரத்தின் வடமேற்குக் கரையோரம் ''செட்டி குறிச்சி'' என்ற பெயரால் அழைக்கப்பெற்று இன்றும் அப்பெயர் வழக்கிலுள்ளது. இருப்பினும் கடந்த இருபதாம் நூற்றாண்டுடன் இங்கு வாழ்ந்த செட்டி பெருமக்கள் அருகிப் போய் விட்டனர்.

செட்டியார் வம்சாவளியினர் எந்தெந்த நாடுகளுக்குச் சென்று வாழ்ந்து தமது வாணிபத் தொழிலை மேற்கொண்டார்களோ அங்கெல்லாம் சைவாலயங்கள் அமைத்து வழிபடத்தவறியதில்லை.

கொழும்பு செட்டித்தெரு, வெள்ளவத்தை சைவக் கோயில்கள் செட்டியார்களின் நினைவுச் சின்னங்களே.

சம்பில்துறைப் பிரதேசமோ சன நடமாட்டமற்ற காட்டுப் பிரதேசமாக இன்று விளங்குகின்றது. ஆனால் பண்டைய வரலாறு கூறும் பாலிமொழி நூலாகிய 'மகா வம்சம்' தரும் ஆதாரங்களை மூல தனமாக வைத்து பௌத்த சிங்கள மக்கள் தமது மதத்தைப் பிரபல மடையச் செய்வதற்காக சம்பில் துறையில் பலகோடி ரூபா செலவு செய்து புத்த விகாரை அமைத்தும் பாஞ்சாலைகள், பூஞ்சோலைகள் உருவாக்கியும் சிறப்பாகப் பேணி வருகின்றனர்.

நம் நாட்டிலேற்பட்ட போராட்டம் இச் சம்புநாதேஸ்வரத்தையும் விட்டு வைக்கவில்லை. இக் கோயில் 1995 இல் வீசப்பட்ட எறிகணைகளினால் பெரும்பகுதி முற்றாகச் சிதைந்துபோக, எஞ்சியவையும் வெடிகளின் தாக்கத்தினால் அதிர்ந்து ஈடாடிய நிலையில் இருந்தபோது பூசை வழிபாடுகள் நின்றன.

பின்னர் வரலாற்றுப் பழமை வாய்ந்த 'அம்மன்' விக்கிரகமும் திருடப்பட்டு விட்டது.

### தற்போதைய நிலை

பண்டைக் காலத்தில் சோழ புரத்தில் அரசோச்சிய செட்டிமார் வம்சாவளியினர் இரண்டாயிரம் ஆண்டுமுடிவுடன்குடிபெயர்ந்து பிற இடங்களுக்கு சென்று விட் டனர்.

இந்நிலையில் பழம்பெரும் இவ் ஆலயத்தை 2500 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்வழிச் சொத்துரிமைக்காரராகி வந்த கடைசி உரிமைக்காரர் செய்வதறியாது மனம்விரும்பி, அயற்கிராமங்களில் வாழ்கின்ற வழிபடுவோரை அணுகி உரித்தான சொத்துக்களை ஏற்கும்படி விண்ணப்பித்தனர். இது பின்னர் பரிபாலன சபையிடம் கைமாற்றம் பெற்றிருந்தது. 2000 ஆம் ஆண்டு தைமாதத்தில் மேற்படி ஆலய புனர் நிருமாண அலுவல்கள் ஆரம்பமாகின.

வரலாற்றுச் சிறப்புமிக்க புனிதமான சுயம்புநாதேஸ்வரி சமேத சுயம்பு நாதலிங்கப்பெருமானுக்கு கடந்த (14.07.2008) அன்று யந்திரபூசை நடைபெற்று நிகழும் ... 04.09.2008 வியாழக்கிழமை குடமுழுக்கு நடைபெற இருக்கின்றது.




## நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



காமமுத லாறுங் கடிந்து கடிகமழுஞ்
சேமந் தருந்திவ்ய பாதத்தை- ஆமளவும்
போற்றிப் புகழுவீர் பொன்னிலங்கை நன்னாட்டீர்
மாற்றிப் பிறக்க மருந்து.

- யோகர் சுவாமிகள்

### போரினைப் போக்கிடுவாய்

பாரினில் நடக்கும்
யுத்தத்தைப் போக்கி- வேலனே
மானிடர் எம்மைக்
காத்தருளும்.....

கொடிய வறுமையின்
பிடியில் இருந்து- குமரனே
ஒவ்வொரு உயிரையும்
மீட்டருளும்....

ஆணவம் நீக்கி
அகங்காரம் விலக்கி- கந்தனே
ஆன்மீக நெறியில்
வழி நடத்தும்..... .

தாயும் நீதான்
தந்தையும் நீ தான்- நல்லூர் நாயகனே
உம் அன்பால் எம்மை
ஆட்சி செய்யும்....

வி.முகிலன், நெடுந்தீவு-13.

### அல்லல் போக்கிடும் நல்லைக் குமரன்!

தவமிருந்த தம் அடியார்க்கு அருள் பொழிந்த ஆறுமுகா!
சிவ சுதனே சரவணனே! சேவற்கொடி வேலவனே!
நவ கிரக தோஷமெல்லாம் தொலைந்திட அருள் பவனே
புவனமதின் பேரவல அல்லல்தனைப் போக்கிடுவாய்.

ப.சின்னராசா, மருதனார்மடம்.

### தலைவா வாழ்க

நற் றமிழன் தலைவா வாழ்க!
நல்லைப் பதியின் நாயகா வாழ்க;
நறுமணம் கமழும் அழகா வாழ்க!
நவசக்தித் தாயின் புதல்வா வாழ்க! வாழ்க!!

கி.கல்கிராஜ்.

### குமரன் குறுநகை காண....

உள்ளந் துடிக்குதடி என்னுயிர்த் தோழி
கொள்ளை கொண்டகுமரன் குறுநகை கண்டிட

வெள்ளம்போல் அடியவர்கள் வீதியில் புடைசூழ
துள்ளிக் காவடிகள் மயிலாட்டம் ஆடிவர
உள்ளம் எல்லாம் இனிக்கும் பாமாலை சேர்ந்தொலிக்க
வள்ளி தெய்வயானையுடன் வலம் வரும் குகனைக்காண

சரவணப் பொய்கையில் தவழ்ந்திடும் அழகும்
கரத்தினில் வேலேந்தி பவனிவரும் அழகும்
தேரடிச் செல்லப்பன் குருவாகிய அழகும்
சீரடியார் தொழும் கந்தன் அழகைக் காண.

எஸ்.சிவானந்தராஜா, பண்டத்தரிப்பு.

### துணை நிற்பாய் முருகா!

அல்லையிலே எம்மக்கள்
அடிபட்ட பெருந்துயரத்
தொல்லையினி யில்லையெனத்
துணை நிற்பாய் முருகா!
நல்லையிலே வீற்றிருந்து
நமக்கெல்லா மருள் சுரக்கும்
எல்லையிலா நின் பெருமை
எமக்கு நீ காட்டு நிதம்.

மு.க.சிவானந்தம்.

### இறையருளைப் பெற்றே வாழ்வோம்

கந்தனது சந்நிதிக்கு செல்வோம் வாரீர்
கலாசார ஆடைகட்டி அவனைத் தொழுவோம்
எந்த இடர் வந்தாலும் நல்லைக் கந்தன்
எமையெல்லாம் துணையிருந்து காப்பானிங்கு
சந்ததமும் அவன் புகழ் பாடித் தொழவே
சமாதானம் தந்தெமைக் காப்பானிங்கு
இந்து மத மரபுகளை பேணியிங்கே நாளும்
இறையருளை கந்தனிடம் பெற்றே வாழ்வோம்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.

### சீருடனே வந்து காப்பாய்!

பஞ்சமும் பசியும் நீங்கப்
பட்டினிக் கோலம் நீங்க
கெஞ்சிடும் வாழ்க்கை நீங்க
கிளர்ந்திடும் பகைமை நீங்க
அஞ்சிடும் அவலம் நீங்க
ஏதிலி இழிவு நீங்க
வஞ்சக உறவு நீங்க
வருந்திடும் நோய்கள் நீங்க
செஞ்சுடர் வேலைத் தாங்கி
சீருடன் வந்து காப்பாய்

கா.கார்த்திகேசு, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹரி ஓம் நமோ

# கோப்பாய் வடக்கு அருள்மிகு ஸ்ரீ

# புதிய சித்திரத் தேர் வெள்ளோட்

## ஆசியுரை



கோப்பாய் வடக்கில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சக்கராழ்வார் திருவருள் கடாட்சத்தினால் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டத் திருநாள் இன்று (21.08.2008) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அமிர்த சித்த யோக தேவசங்க சுபவேளையிலே சக்கராழ்வாரின் அருட்கோலக் காட்சியுடன் நடைபெறவுள்ளது.

கண்ணன் அடியார்கள் யாவரும் இந்நாளில் தங்களது கவலைகளை நீக்குவதுடன் சாந்தியும் சமாதானமும் ஏற்பட ஸ்ரீசக்கராழ்வாரின் பாதார விந்தங்களையும் எமது சற்குருநாதரின் பாதார விந்தங்களையும் பிரார்த்திப்போம்.

சிற்பக்கலை மிகவும் மகத்துவமானது. இவ்வூரைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் தியாகராசா பிரதீபன் அவர்களால் மிகவும் சிறப்பாக கலையம்சங்களுடன் உருவாக்கப்பட்ட அழகிய அற்புதச் சித்திரத் தேரினிலே ஸ்ரீ சக்கராழ்வார் எழுந்தருளவுள்ளார். சிற்பக்கலாஜோதி பட்டம் பெறும் தியாகராசா பிரதீபன் சிற்பக்கலையில் சிறந்து விளங்க எல்லாம் வல்ல ஸ்ரீ சக்கராழ்வாரை பிரார்த்திக்கின்றேன்.

கந்தையா அழகேஸ்வரன்,
பிரதமகுரு, ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்.

## சக்கராழ்வார் அருளொளி வழங்கவேண்டும்



கோவையில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெறவுள்ளது. ஊர்மக்கள், அயற்கிராமத்து மக்கள், வெளிநாட்டவர் ஆகிய எல்லோரதும் அயராத முயற்சியின் பயனால் உருவாக்கப்பட்டதே இச்சித்திரத் தேர். ஸ்ரீ சக்கராழ்வார் அருள்தரப் பவனிவரும் வகையில் அமைக்கப்பட்ட சித்திரச் சிற்ப வேலைப்பாடுடைய இத்திருத்தேர் தியாகராசா பிரதீபன் அவர்களின் தலைமையிலான குழுவினால் குறிப்பிட்ட கால வரம்புக்குள் கண்ணுக்கு தெய்விகக் காட்சி ஒளிவழங்கும் வகையில் உருவாக்கப்பட்டது.

இன்றைய சித்திரத்தேர் வெள்ளோட்ட திருநாளில் தியாகராசா பிரதீபன் அவர்களுக்கு 'சிற்பக்கலாஜோதி' என்ற கௌரவப்பட்டம் சக்கராழ்வார் தேவஸ்தானத்தினரால் வழங்கப்படுகிறது. இச்சித்திரத் தேரில் ஸ்ரீ சக்கராழ்வார் பல்லாண்டு காலம் பவனி வந்து அருளொளி வழங்கவேண்டுமென்று சக்கராழ்வாரைப் பிரார்த்தித்து எமது குருநாதரின் பாதாரவிந்தங்களையும் பிரார்த்தித்து எனது ஆசியுரையை இனிது நிறைவு செய்கின்றேன்.

கந்தையா தேவராசா, ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்.

## கண்ணபிரானை வழிபட்டால் கேட்கும் வரம் கிடைக்கும்



வடகோவையிலே எழுந்தருளியுள்ள ஸ்ரீ சக்கராழ்வாரின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று குரு ஆசியுடன் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்வாலயம் தமிழில் கூட்டுப் பிரார்த்தனை மூலம் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது. இதற்கு மூலகாரணமாக இருந்து எம்மை எல்லாம் வழி நடத்தியவர் சற்குருநாதர். அவர் வழியே வந்த இரத்தினம்மா, பழனியப்பா, சாமியப்பா, பாக்கியம்மா, பூமாதுஅம்மா, காந்தியம்மா இவர்களை இந்நாளிலே நினைவு கூருகின்றோம். அவர்கள் காட்டிய வழியின்படி தீபவழிபாடு, கூட்டுப்பிரார்த்தனை மூலம் பூஜைகள் நடைபெற்று மக்களின் துன்பம் தீர்க் கும் ஆலயமாக விளங்குகின்றது. கேட்கும் வரம் கொடுக்கும் கண்ணபிரானை நம்பிக்கையுடன் நாம் வழிபட்டால் ஸ்ரீ சக்கராழ்வார் வெற்றிகளை எமக்குத் தருவார். இன்று சிற்பக்கலாஜோதி பட்டம் பெறும் தியாகராசா பிரதீபன் மேன் மேலும் சிற்பக் கலையில் சிறந்து விளங்க எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

கெங்காதரன் ருக்மணி, ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்.

## தமிழ்மொழியில் பூசை நடைபெறும் ஆலயம்



அறத்தைக் காப்பதற்காக தேர் ஏறிய கண்ணனுக்கு திருக்கோயில் அமைத்தவர்கள் கோப்பாய் மக்கள். சிறிய குடிசையில் கிருஷ்ணனை நினைந்து சக்கர வழிபாட்டுடன் ஆரம்பித்த கோயில் இன்று பெரும் கோயிலாக காட்சியளிக்கிறது. ஆதியில் ஸ்தாபித்த குருநாதர் அவர்களை ஆலயக் கருவறைக்குப் பின் சமாதியில் இருத்தி கிருஷ்ணனையும் அவரது பக்தனையும் இணைத்து வழிபடும் இனிய மார்க்கம் இத்திருக்கோயிலின் தனித்துவம் எனலாம். தீராத துன்பத்தை விரட்டுவதற்கு தினம் தினம் இத்திருக்கோயிலை நாடிப் பக்தர் கூட்டம் வருகை தருவது சிறப்புக்குரியது. காந்தியம்மா என்ற பெண்மணி பூசை செய்து, பெண்களும் குருவாகப் பூசை செய்வதை கண்ணன் ஏற்பான் என்ற புதிய அத்தியாயத்தை இவ்வாலயத்தில் ஏற்படுத்திய வரலாறு இன்று வரை தொடர்கிறது. தமிழ்மொழியில் பூசை நடைபெறும் தனித்துவம் இங்கு மரபாகப் பேணப்படுகிறது. பஜனைதான் பரந்தாமனுக்குப் பிரியமானது எனத் தினமும் இசை அர்ச்சனை நடைபெறுகிறது. இத்தகைய அற்புதக்கோயிலில் புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு கண்ணன் தேர் ஏறி வரவிருக்கும் செய்தி மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞன் தியாகராசா பிரதீபன் அவர்களுக்கும் ஏனைய கலைஞர்களுக்கும் என் இனிய ஆசிகள் உரித்தாகட்டும். கண்ணனின் தேர் உருவாக அல்லும் பகலும் உழைத்த ஆலய நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் என்றும் நல்லருள் கிடைக்கப் பிரார்த்தித்து, குறிப்பாக திருப்பணிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் கந்தையா தேவராசா அவர்களின் முன்மாதிரியை வாழ்த்தி அமைகிறேன்.

''யாவர்க்குமாம் இன்னுரைதானே''

ஆறு.திருமுருகன்.

## சக்கராழ்வாருக்கு இன்று தேர் வெள்ளோட்ட விழா



வடகோவையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சக்கராழ்வாருக்கு புதிய சித்திரத்தேரை உருவாக்கவேண்டும் என்று ஆலய தேவஸ்தானத்தினர் பெரும் விருப்பங்கொண்டு, கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட எங்களுடன் கலந்து பேசி இந்தச் சித்திரத்தேரை சிறந்த முறையில் கண்ணனின் திருவருள் சிற்பங்களுடன் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். கண்ணனின் திருவருள் அதுவென்றால் நாம் நினைப்பது ஒன்றுமில்லை. இருபத்தைந்து அடி உயரமான பூஷாந்திர எண் கோணத்தேரை உருவாக்கியுள்ளேன். புதிய சித்திரத்தேர் குறுகிய காலத்தில் மிகுந்த கலைச் சிற்பச் சிறப்புக்களுடன் நிறைவு பெற்றுள்ளது.

தேவஸ்தானத்தினரின் விடாமுயற்சியும், கண்ணன் மெய்யடியார்கள் அளித்த பேருதவியும், குருநாதரின் ஆசியும், இந்தச் சிற்பத்தேரை உருவாக்குவதற்கு பெரும் காரணமாக அமைந்தது. என்னுடன் பலவழிகளில் உதவிய சிற்பக்கலைஞர்கள், தேவஸ்தானத்தினர், கண்ணன் அடியவர்கள் அனைவருக்கும் இந்த வெள்ளோட்ட நன்நாளிலும் ஸ்ரீ சக்கராழ்வார் சித்திரத்தேரில் பவனி வரும் அருட்கோலக் காட்சியைக் கண்டு கண்ணன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சிற்பஸ்தபதி தியாகராசா பிரதீபன்.

## மக்களின் பிணிகள் தீரப் பிரார்த்திப்போம்



கோப்பாய் வடக்கு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தில் இன்று புதிய சித்திரத்தேர் வலம்வர இருப்பது எல்லாம் வல்ல சக்கராழ்வாரின் பேரருளினால் ஆகும்.

வேண்டுவார்க்கு அள்ளி அருள் புரியும் எம்பெருமான் திருத்தேரில் பவனி வந்து மக்களின் தீராப்பிணிகள், துன்ப துயரங்களைத் தீர்க்க பிரார்த்திப்போமாக. ஆலயங்களில் தேர் அமைத்து விழா எடுப்பது அம்மக்களின் ஒற்றுமையையும் கலை, பண்பாடுகளையும் வெளிப்படுத்துவதாகும். அந்தவகையில் கோப்பாய், உரும்பிராய் மற்றும் அயல் பிரதேச மக்கள் பெரும் பாக்கியசாலிகள் ஆவர். சக்கராழ்வாரின் இப்பெருவிழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல கண்ணபெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

திருமதி மதுமதி வசந்தகுமார் (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்).




## குருநாதர் வ



## மெய்யடியார்களைக் காத்



கோப்பாய் வடக்
சக்கராழ்வார் ஆலயத்
வரும் வருடாந்த மகோ
இரட்சிக்கும் கண்ண
சியால் சிறந்த வேலை
வெள்ளோட்டம் கா
முறையில் நிர்வகித்து
சிறந்த முறையில் உரு
தீபனுக்கும் மற்றும்
நடைபெறும் நன்னா
கும் தேரில் அமர்ந்து வலம் வரும் வேளை
ஏற்பட்டு எல்லோரும் இன்புற்று இருக்க
அமைய கண்ண கைத் தாயின் திருவருட் து
ஓம் நமோ ந
பரமசாமி குரு
(சக்தி
ப

## வெள்ளோட்ட விழாச் சி


கடமை, ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன்
தரமான கல்வியைப் பெற்றிட
**கலைவாணி கல்வி நிலையம்**
மானிப்பாய் வீதி, கோப்பாய்.

அன்றாட தேவைப் பொருள்களை சீரான
விலையில் பெற்றிட
**மகாதேவன் களஞ்சியம்**
மானிப்பாய் வீதி, கோப்பாய்.

மளிகைப் பொருள்களை
**தம்பிமுத்து**
மானிப்ப
கோப்

மளிகைப் பொருள்களை மலிவாகப் பெற்றிட
**கண்ணகை அம்பாள் களஞ்சியம்**
மானிப்பாய் வீதி,
கோப்பாய்.

டீசல் வாகனங்களைச் சிறந்த முறையில்
பழுது பார்ப்பதற்கு
**செல்வன் டீசல் என்ஜினியேர்ஸ்**
கோப்பாய்ச் சந்தி, கோப்பாய்.

புடைவைத் தினுசுகளை
பெற்
**மகாராணி ப**
50, பெரியகடை,

மிதிவண்டி உதிரிப்பாகங்களைத் தரமாகப் பெற்றிட
**கயானன் மிதிவண்டி**
**உதிரிப்பாக விற்பனை நிலையம்**
மானிப்பாய் வீதி, கோப்பாய்.

அன்றாட அத்தியாவசியப் பொருள்களை
மலிவாகப் பெற்றிட
**குமார் மல்ரி றேட் சென்ரர்**
மானிப்பாய் வீதி, கோப்பாய்.

நவீன வடிவமைப்பு
நகைகளை
**சிறி மதனா ந**
155/m, கஸ்தூரியார்

அன்றாட இன்றியமையாப் பொருள்களை
நியாய விலையில் பெற்றிட
**கவி ஸ்ரோர்ஸ்**
மானிப்பாய் வீதி, கோப்பாய்.

வாகனங்களிற்கான அவசிய அடிப்படைப்
பணிகளைப் பெற்றிட
**விஷ்ணு ரான்ஸ்போட் சேவிஸ்**
கோப்பாய் மத்தி.

எழில் குன்றா அழகிய
நகைகளை ஓடர் மூலம் உ
**சிறி முருகன் ந**
68, கஸ்தூரியார்
TP.: 021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரீ சக்கராழ்வார் ஆலயம்


# ...ட விழாச் சிறப்பு மலர்

(21.08.2008 வியாழக்கிழமை)

...னி பவளவாய் கமலச் செங்கண்
...ம் கொழுந்தே என்னும்
...ப் இந்திரலோகம் ஆளும்
...டேன் அரங்கமா நகருள்ளானே



...வரிசையில்



## ...த்து இரட்சிக்கும் கண்ணன்

...டக்கில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ ...யத்தில் பன்னெடுங் காலமாக நடைபெற்று ...கோற்சவ காலத்தில் மெய்யடியார்களை காத்து ...ணன் ஆலயத்தில் அடியவர்களின் பெரு முயற் ...லைப்பாட்டுடன் உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் ...காணும் இன்றைய நாளில் ஆலயத்தைச் சிறந்த ...த்து வரும் நிர்வாகிகளுக்கும் சித்திரத்தேரை ...உருவாக்கிய விஸ்வ பிரம்மஸ்ரீ தியாகராசா பிர ...ம் கலைஞர்களுக்கும் இவ்வெள்ளோட்டம் ...ாளிலே நாராயணப் பெருமான் அடியார்களுக் ...ளயில் நாட்டில் சாந்தி, சமாதானம், அமைதி ...க கண்ணன் பாதம் பணிந்து விழா சிறப்புற ... துணையுடன் ஆசிகூறி அமைகின்றேன்.

...ா நாராயணா ஓம்.

...நரு சக்தி ஸ்ரீ சண்முகராஜ சிவாச்சாரியார்
...க்தி உபாசகர், வேத சிவாகம வித்யா பூஷணம்)
பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்.

## கோப்பாய் வடக்கு ஸ்ரீசக்கராழ்வார் ஆலய வரலாறு

பரந்து விரிந்த பழம்பெரும் நாடாம் பாரத கண்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடியில் விரிந்த கலை என்பது ஒரு சிற்றூர். அந்நியராட்சியில் மதமாற்றம் செய்யப்பட்ட பல பாரதகுல மக்கள் இங்கே வியாபாரம் செய்து வந்தார்கள். அப்படியான ஒரு நடுத்தர கிறிஸ்தவ குடும்பத்தைச் சார்ந்தவரே எமது குருநாதர். இவருடைய இளமைப்பெயர் சவியர். இளம் பராயத்திலே தந்தையை இழந்துவிட்டார். அதனால் குடும்பப் பாரத்தைச் சமாளிப்பதற்காக பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு உடலுழைப்புக்கு ஆயத்தமானார். அதனால் கப்பலோட்டிகளின் துணைகொண்டு இலங்கை வந்தார். கொழும்பிலே தன் உறவினர்களுடன் வசித்து துறைமுகத்தொழிலாளியாய் வேலை பார்த்தார். காலப் போக்கில் முன்னேற்றங்கண்டு படகுகளில் இறக்குமதி செய்யும் தொழிலில் தலைமை பூண்டு கைநிறையச் சம்பாதிக்கும் நிலையை எய்தினார்.

உரிய காலத்தில் சொந்த நாடு திரும்பித் தனது தாயாரின் வேண்டுகோளுக்கு இசைந்து இல்லறத்தில் ஈடுபட்டார். இதன் பேறாக ஒரு குமாரனையும் பெற்றார். இருந்தும் இவரது அவதார மர்மத்தைக் கண்டு எம்பெருமானின் திருவுளத்தால், தாயார், மனைவி, மகன் எல்லோரையும் ஒருவர் பின் ஒருவராக மறையச் செய்தார். இவரது முப்பத்தைந்தாம் வயதில் மைத்துனர் ஒருவர் தீராத நோயினால் வாடினார். அவர் இந்து சமயத்தைச் சேர்ந்தவராகையால் சம்பிரதாயப்படி நிதிமாலை தெகிவளை கிருஷ்ணன் கோயிலுக்குச் செல்லவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. முன்வினை கைகூட்ட முழுவினையும் தீர்த்தருளும் எம்பெருமான் திருவுளங்கொண்டு அவர் மதியினுட் புகுந்துவிட்டார். கிறிஸ்தவர் என்றதனால் விபூதி வாங்க மறுத்துவிட்டார். அர்ச்சகருக்கும் குருநாதருக்கும் தர்க்கம் ஏற்பட்டது. இதனால் மனமுடைந்த குருநாதனை எம்பெருமான் பக்கத்திலிருந்த அரசமரத்தில் தமது அருவமும் உருவமும் ஆகிய சோதிக்காட்சியைக்காட்டி மும்முனிவர்கள் மூலம் ஞானவிளக்கமும் உபதேசமும் ஊட்டுவித்தார். அறிதுயிலில் ஆழ்ந்த எமது குருநாதர் மூன்றாவது திருநாள் ஞாயிறு வாரத்தில் பெரும் பரிசினைப் பெற்று அடிமுடிகாண முடியாத அமலனின் பாதார விந்தங்களைக் கண்டு வாயாரப் பாடித் துதித்து மகிழ்ந்தார். இக்காலத்திலே கோப்பாய் வடக்கில் வசிக்கும் ஆசாரியார் குடும்பத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இரத்தினம்மாள் தனது கணவராகிய இராசலிங்கம் அவர்களின் தீராத நோயை தீர்ப்பதற்கு குருநாதரை நாடி அவரின் மூலம் இல்லத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடத்தி ஆறுதல் கொடுத்தார்.

1942ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தால் இரத்தினம்மாள் குடும்பமும் சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. அப்போது எங்களை இறுதிப் பரியந்தம் காக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டதற்கிணங்க குருநாதர் அவர்களுடன் கோப்பாய் வந்தார். அங்கு அவர்களுடைய இல்லத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடத்தி கோவை மக்களின் இன்னல்களைத் தீர்த்தார். பின்பு ஆலயம் ஒன்று அமைக்க எம்பெருமான் திருவுளங் கொண்டதால் கோப்பாய் வடக்கில் கொழுவியம்பதியில் 1949ஆம் ஆண்டு சித்திரைத் தமிழ் திங்களில் 2 ஆம் திகதி சிறு குடிசையில் கண்ணன் சிலையாக உருவெடுத்துக் காட்சி கொடுத்தான். தொடர்ந்து 1958ஆம் ஆண்டு சித்திரை தமிழ் திங்கள் 2ஆம் திகதி நாற்பத்து மூன்று முக்கோணமும் நவக்கிரகங்களும் கொண்ட சக்கரம் தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் நிலை நாட்டப்பட்டுக் கூட்டுப்பிரார்த்தனை மூலம் வழிபாடு செய்யப்பட்டது. தூய தமிழில் பூசை வழிபாடுகளும் நடத்தப்பட்டன. குருநாதருடன் இரத்தினம்மாளின் சகோதரர்களான பழனியப்பா, பாக்கியம்மா, அன்னபூரணம் ஆகியோருடன் குரும்பசிட்டியை சேர்ந்த நாகநாதர் (ஐயம்பிள்ளை), காந்தியம்மா எல்லோரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை மூலம் வழிபட்டு வந்தனர். குருநாதர் தன் தீப வழிபாட்டின்படி பலரது நோய்களைத் தீர்த்து வைத்தார். புத்திர பாக்கியம் அற்றவர்கள், மணவாழ்க்கை அமையாத கன்னிப் பெண்கள் ஆகியோரின் வேண்டுகோள்களை தீபவழிபாட்டின் மூலம் நிவர்த்தி செய்தார்.

1958ஆம் ஆண்டு தொடக்கம் மகோற்சவம் நடைபெறக் கைகூடியது. மூலஸ்தானத்திலிருந்து தனது 51ஆவது பாத அடியில் நாகஸ்தம்பம் நாட்டப்பட்டது. இது நாகமரத்தால் ஆனது. 31 அடி உயரமுள்ளது. நாட்டு மக்களின் துன்பம் நீக்க கருடன் ஆஞ்நேயர் சக்கரம் கொண்ட பறக்கும் கொடியாக இங்கு ஏற்றப்படும் கொடி அமைகின்றது.

இவ்வேளையில் எம்பெருமானின் நற்கருணையால் 1969ஆம் ஆண்டு ஆடி மாதம் 14 ஆம் திகதி புனர்பூசத்தன்று எம்குருநாதர் சமாதியடைந்தார். அதைத் தொடர்ந்து 1973இல் இரத்தினம்மாளும் சாந்தியடைந்தார். இதன்பின் ஆலயப் பொறுப்பை பழனியப்பாவும் சாமியப்பாவும் அவர்களுடன் ஏனைய ஞானக்குழந்தைகளும் நடத்தி வந்தனர். பின்னர் 1985இல் சாமி அப்பாவும் தொடர்ந்து பழனியப்பாவும் நற்பேறெய்தினார்கள். இதன்பின் ஆலயப் பொறுப்பை தற்போது முகாமையாளராக உள்ள பாக்கியம்மாவின் இரண்டாவது புதல்வன் தேவராசா ஏற்று நடத்தி வருகிறார். இவரின் பொறுப்பில் பிரதம குருவாக காந்தியம்மாவும் ஏனைய ஞானக்குழந்தைகளும் நடத்தி வந்தனர். ஞானக்குழந்தைகளாகிய பாக்கியம்மா 1987இலும் அன்னபூரணம் 1994இலும் நற்பேறெய்தினார்கள். தொடர்ந்தும் காந்தியம்மா வழிபாடுகளை நடத்தி வந்தார். தனது வாக்கு வன்மையான தீராத நோய்களைத் தீர்த்து மக்களின் மனக்கவலையை குருநாதர் காட்டிய தீப வழிபாட்டின்படி தீர்த்து வைத்தார். முக்காடு இட்டவர்களுக்கு எக்காலமும் குறைவில்லை என்று கூறிய குருநாதர் வாக்கு தற்போது இங்கு காணக்கூடியதாக உள்ளது.

1991ஆம் ஆண்டு வசந்த மண்டபம் அமைக்கப்பட்டு 1991 சித்திரை 2இல் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. 1992 ஆடியில் வரலக்சுமி பூசையன்று சிதேவி, பூதேவி சமேத நாராயணர் வசந்த மண்டபத்தில் எழுந்தருளினார். இங்கு உதயத்தில் உள்ள வல்லிபுரநாராயணன் கோயிலிலிருந்து எடுத்துவரப்பட்ட திருமண்ணே நாராயணன் பிரசாதமாக வழங்கப்படுகிறது. பிரதம குருவாக இருந்து தமிழ் முறைப்படி பூசை வழிபாடுகளை செய்து கோவை மக்கள் மட்டுமல்ல எத்தனையோ ஊர்களிலிருந்து வந்த மக்களின் துன்பங்களை எல்லாம் தீபவழிபாட்டின்படி நீக்கிய எம்பெருமாட்டி காந்தியம்மா 2001 ஆடி 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அட்டமி திதியில் பரந்தாமன் பாதார விந்தங்களை சென்றடைந்தார்.

தற்போது பாக்கியம்மாவின் புத்திரர்கள் தேவராசா குடும்பமும் அழகேஸ்வரன் குடும்பமும் அன்னபூரணத்தின் மகளான கெங்காதரன் ருக்மணியும் கூட்டுப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டு குருநாதர் காட்டிய வழிபாட்டின்படி பூஜைகள் நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் தமிழ் 2 ஆம் திகதியும் மகோற்சவ காலங்களிலும் அன்னதானமும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குருநாதர் ஆசியும் முன்னோர்களின் ஆசியும் பத்தா பத்தினி பத்திரத்து ஈஸ்வரி (காந்தியம்மா) ''சக்கராழ்வார் ஆலய வீதியில் தேரோடும்'' என்று அன்றுரைத்த வாக்கு அருள்வாக்காகஇன்று சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்வு நடைபெறுகிறது. அழகிய இந்தச் சித்திரத் தேரிலே பவனிவரும் ஸ்ரீ சக்கராழ்வார் அடியவர்களின் துன்பங்களைத் தீர்த்து வேண்டுவோரின் இன்னல்களை நீக்கி அருள்பாலிப்பார்.


## ...சிறப்புற வாழ்த்துவோர்:

...ளை மலிவாகப் பெற்றிட
**...து ஸ்ரோர்ஸ்**
...பாய் வீதி,
...ோப்பாய்.

சக்கராழ்வார் ஆலயத்திற்கருகில்
பூசைப்பொருள்களையும் மளிகைப்
பொருள்களையும் பெற்றிட
**பராசக்தி பல்பொருள் வாணிபம்**
மானிப்பாய் வீதி, கோப்பாய்.

கணனிக் கல்வியில் கோப்பாயில் புதிய நிறுவனம் 01.09.2008 இல் உதயமாகின்றது. அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளையும் தரமான போதனாசிரியர்கள் மூலம் பெற்றிடலாம். மாணவர்கள் கற்கைநெறியில் இணையப் பதிவினை மேற்கொள்ளலாம்.
**SPG Computer centre**
மானிப்பாய் வீதி (கலைவாணி கல்வி நிலையமருகில்) கோப்பாய்.

...ளை ஒரே கூரையின் கீழ்
...ற்றிட
**...ட்டுச்சோலை**
...ட, யாழ்ப்பாணம்.

அன்றாட இன்றியமையாப் பொருள்கள், விவசாய உள்ளீடுகள், விதைவகைகள், மின்சாதனப் பொருள்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் மலிவாகப் பெற்றிட
**பவானி களஞ்சியம்**
இராச வீதி, கரந்தன், நீர்வேலி.

தரமான பாண், பனிஸ், கேக், பிஸ்கட் வகைகளைப் பெற்றிட
**சதா வெதுப்பகம்**
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

...புகளில் அழகிய தங்க
...ளப் பெற்றிட
**...நகை மாளிகை**
...ர் வீதி, யாழ்ப்பாணம்.

அழகுசாதனப் பொருள்கள், மருந்துச்சரக்குப் பொருள்கள், புடைவை, காலணி வகைகள், போட்டோப்பிரதி, லெமினேற்றிங், வீடியோபிரதி ஆகியவற்றை ஒரே கூரையின்கீழ் பெற்றிட
**திருமுருகன்** திருமண மண்டபமும்
பல்பொருள் அங்காடியும் அன் வீடியோ போட்டோவும்
கரந்தன் வீதி, நீர்வேலி. TP: 0776624593

தரமான அழகிய அசல் 22 கரட் தங்க ஆபரணங்களை ஓடர் மூலம் பெற்றிட
**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

...ய 22 கரட் தங்கப் பவுண்
... உத்தரவாதத்துடன் பெற்றிட
**... நகைமாளிகை**
...ர் வீதி, யாழ்ப்பாணம்.
...21 222 5965

**AMT Transport Service**
பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி, கோப்பாய். TP.: 021 222 5784
**தலைமைப் பணிமனை**
230/232, Wolfendhal Street, Colombo-13.
TP.: 0115366158, 0112451158

லுமாலா, ஹீரோ சைக்கிள்கள், லேடிஸ் சைக்கிள்கள் மற்றும் தரமான சைக்கிள் உதிரிப்பாகங்களை மலிவாகப் பெற்றிட
**வெங்கடேஸ்வரா**
125 A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். TP..: 021 222 2905


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் கணித வினாடி வினாப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஓக.21

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற கணித வினாடி வினாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

தரம் 6: பு.சாரங்கா (உடுவில் மகளிர் கல்லூரி), ப.காண்டீபன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), எஸ்.பிரணவன் (புன்னாலைக் கட்டுவன் அ.த.க. பாடசாலை),

தரம் 7: கி.விஷ்ணுகா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), சி.தேனுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), ம.சங்கவி (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி)

தரம் 8 : கே.கௌசிகன் (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி) பு.வைஸ்ணவன் (தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), ப.மயூரதன் (பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்)

தரம் 9: தி.சேந்தன் (பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்), தி.ஜீவிதா (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), ஞா.கீர்த்தனன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி).

தரம் 10 : என்.கோகுலன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), சா.இசைப்பிரியா (இணுவில் மத்திய கல்லூரி), த.தர்சனா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி)

தரம் 11 : எஸ்.லாவண்யா (இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்) , இ.பகீரதன் (தெல்லிப் பழை மாஜனக் கல்லூரி), து.புவனா (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்),

தெல்லிப்பளை கல்விக் கோட்டம் இரண்டு முதலாம் இடங்களையும் நான்கு இரண்டாம் இடங்களையும், ஒரு மூன்றாம் இடத்தையும் சங்கானை கல்விக் கோட்டம் இரண்டு முதலாம் இடங்களையும் இரண்டு இரண்டாம் இடங்களையும் ஒரு மூன்றாம் இடத் தையும், உடுவில் கல்விக் கோட்டம் ஒரு முதலாம் இடத்தையும் இரண்டு இரண்டு இரண்டாம் இடத்தையும் ஒரு மூன்றாம் இடத்தையும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம் ஒரு முதலாம் இடத்தையும் ஒரு இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள் ளன.

(202-86)


## எமது நிறுவனத்தின் 12ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளருக்கு

20% கழிவு

மாபெரும் இச்சலுகை இம்மாதம் 20 தொடக்கம் 30 வரை

போட்டோக் கொப்பி
லேசர் பிறிண்ட் A3
லேசர் பிறிண்ட் கலர்
ஸ்பைரல் பைண்டிங்
காட் பைண்டிங்
லெமனேசன்

தாரங்கி
137, பலாலி வீதி,
தபால்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.
(77349)

றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎: 0112334603





## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### வெள்ளையன் சின்னராசா

மண்ணில் 04.05.1942 — விண்ணில் 02.09.2007

வசாவிளான் எனும் செவ்வூரில் பிறந்து வாழ்வை வளமாக்க
அளவையம் பதியிலே மணம் முடித்து இன்பவாழ்வு
வாழ்வதற்காக குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுத்து
மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகையிலே
காலன் அவன் உனை அழைத்தானோ!
உங்களைப் பிரிந்து ஓராண்டு ஆகிவிட்டது
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும் நினைவு எம்
நினைவில் பசுமையாக என்றும் இருக்கும்.

மணற்புலம்,
அளவெட்டி. (சி/554216) மனைவி, பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 07.11.1931



ஆண்டவன் அடியில் 22.07.2008

### திருமதி சிவகாமிப்பிள்ளை தெய்வேந்திரகுமாரசுவாமி

எமக்கு நிழல் தந்த ஆலமரமாய் நின்றீர்கள். இன்று உங்கள் நினைவுகள் மட்டுமே மிச்சம் . நிரப்பமுடியாத இடைவெளியை உங்கள் பிரிவு தந்துள்ளது. எம்மை விட்டு பிரிந்து திங்கள் ஒன்று நிறைந்த இந்நாளில் எங்கள் நெஞ்சம் நிறைந்த அஞ்சலியை உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்.

எமது குடும்பத் தலைவி சிவபதமடைந்த செய்தி கேட்டு உடனே சமூகம் தந்தும், தொலைபேசி மூலமும், மலர்வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்தியோர்களுக்கும் இறுதிக்கிரியையின்போது எம்மோடிணைந்து செயற்பட்ட அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவிப்பதில் நிறைவடைகிறோம்.

முதலியார் வளவு,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (77329) குடும்பத்தினர்.

## கல்வியியற் கல்லூரி உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு நாளை

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை வங்கியின் கல்லூரிக் கிளை மூலம் வழங்கப்படவுள்ளது என பீடாதிபதி தெரிவித்தார். (202)


### மணமகள் தேவை

1976,மூலம்-2,செவ்வாய் 2 இல், கிரகபாவம் 10,உயரம் 5' 6" உயர் கௌரவ குடும்பம், P.R உள்ள இத்தாலியில் உயர் நிலையில் பொறுப்பான பதவியில் இருக்கும் வெள்ளை நிற மணமகனுக்கு A/L தகைமைக்கு குறையாத கணனி அறிவுடைய மணமகள் எதிர்பார்க்கப்படுகின்றார். மணமகன் கொழும்பு வருவார். அருள் முருகன் திருமணப் பணி யகம், இல.03, யாழ் வீதி (பெருமாள் கோவில் முன்னெதிர் ரயில் பாதை வீதி), யாழ்ப்பாணம். T.P.:222 9334. இரவு 9.30மணி வரை.

### தவறிவிட்டது

ஒரு தொகுதி தொலைபேசி இலக்கங்கள் கொண்ட கொப்பி சங்கானை பட்டின பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. எடுத்து வைத்திருப்பவர் தயவுசெய்து கீழ்வரும் விலாசத்துடன் கடிதம் மூலம் தொடர்பு கொண்டால் நான் நேரில் வந்து சந்திப்பேன்

சி.எஸ்.லோகநாதன் ஜே.பி.
"குமுதம்"
9/9, 2ஆம் ஒழுங்கை, வல்லை வீதி, சங்கானை
021 222 2684


## நீங்கா நினைவுகளில் 31ஆம் நாள்

மலர்வு 09.08.1950



உதிர்வு 22.07.2008

### திருமதி உமாபதிசிவம் தங்கமலர்

அன்பால் அரவணைத்தீர்; பாசத்தோ டெமைக்
காத்தீர்; எல்லோர்க்கும் நல்லாளாய்த் திகழ்ந்தீரே;
பண்புநிறை மாதரசாய்க் கண்டோமுமை
நாளும்; விரைந்துநீர் போனதென்ன? என்றுமெமைக்
கண்ணாகக் காத்தவளே; இன்றிங்கு சிறகிழந்த
கிள்ளைகளானோமே; இனியாருளார் நெடும்
மண்ணிலெமைக்காக்க? தாயே! தெய்வமாய்
எமிலுறைந்து எமைத் தினங்காத்திடுக கருணையாலே.

ஓம் சாந்தி!

வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை. (சி/554229) குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16.10.1952



இறப்பு 04.09.2004

### அமரர் அ.யோகானந்தா

B.Sc. (Cey) Dip in Education (Srilanka)
Assistant Director of Education - Maths - Thenmaradch.
திதி:அபரபக்க பஞ்சமி (21.08.2008)

ஆண்டுகள் நான்கு உருண்டோடியதப்பா
கண்டதெல்லாம் கனவாகிப் போனதப்பா
ஆலமரமாய் ஆறுதல் சொல்லுமப்பாவே
ஆறுதல் சொல்ல யாருமின்றி ஆர்ப்பரிக்கவிட்டு
அவசரமாய் சென்றதேனோ?
அலைகள் ஒய்வதில்லையென்பீர்
இப்போதுமுமது பௌதீக அலை ஓயவில்லை
வாழ்வியலின் தத்துவம் பேசும் நீங்கள் பாதியை
புரியவைத்து மீதியை புரிந்து கொள்ளென
போய்விட்டீர் இதுவும் வாழ்வியலின் தத்துவமா?

71/1, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம். (77347)

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மகன்மார், மருமகள்,
பேரன், பேர்த்திமார்.

## அதிபர்களுக்கு கூட்டங்கள்

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி செயல் திட்ட மீள் மதிப்பீடு தொடர்பான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.


இத் தகவலை வலய கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கல்வி வலய பரீட்சை சபையின்பொதுக் குழுக் கூட்டமும் நடை[illegible] அறிவித்துள்ளார்.

(1-207)

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

ஏழாம் ஆண்டு — ஆறாம் ஆண்டு



அமரர் வேலுப்பிள்ளை
சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
பிரபல வர்த்தகர் மானிப்பாய் V.S.K



திருமதி கணபதிப்பிள்ளை
பத்மாவதி (பவளம்)

மலர்வு 27.12.1922 — உதிர்வு 07.09.2001 — மலர்வு 10.02.1933 — உதிர்வு 28.12.2002

திதி: பஞ்சமி (21.08.2008) வியாழக்கிழமை — திதி: தசமி (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை

கண்ணீரில் கரைந்தது ஆண்டுகள் ஏழு!
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மை இங்கு ஆளுகின்றன
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்க விட்டு எங்கே சென்றீர்கள்
எம் உயிர் உள்ளவரை உங்கள் நாமத்தை மறவோம்
தங்களின் ஆத்மா சாந்தியடைய
மானிப்பாய் வேற்கை முருகனை வேண்டுகின்றோம்

லோட்டன் றோட்,
மானிப்பாய். (77314)

உங்கள் பிரிவில் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அதிகாரத்துக்கு வர உதவிய ஜனநாயகத்தை மீறலாமா?

மரணங்கள் மலிந்த பூமியாகி விட்டது இலங்கைத் தீவு.

ஆள்கடத்தல்கள், அச்சுறுத்தல்கள், படுகொலைகள், கப்பம் அறவிடல், காணாமற் போகச் செய்தல் என்று மனித உரிமை மீறல்கள் மோசமாக இடம்பெறும் அராஜக தேசம் என்ற பெருமையை இலங்கை ஈட்டிக் கொண்டுள்ளது.

தலைநகர் கொழும்பில் இம்மாத முற்பகுதியில் இடம்பெற்ற 'சார்க்' உச்சிமாநாட்டை ஒட்டி சர்வதேசத்தின் முழுக் கவனமும் இலங்கை பக்கம் திரும்பியிருந்தது. அக் காரணத்தினால் இலங்கையில் வெகுவாகக் குறைந்திருந்த ஆள்கடத்தல்கள், வெள்ளைவான் அட்டகாசங்கள், காணாமற் போகச் செய்தல் போன்ற பிரச்சினைகள் இப்போது, 'சார்க்' மாநாடு முடிவடைந்தமையை அடுத்து, மீண்டும் தலைநகரிலும், பிற இடங்களிலும் பரவலாகத் தலைதூக்க ஆரம்பித்து விட்டன.

இந்த இலங்கைத் தீவில் நீதியான, நியாயமான உரிமை கேட்டு சிறுபான்மை இன மக்கள் நடத்தும் போராட்டத்தை அடக்கும் பெயரிலேயே இந்த மோசமான மனித உரிமை மீறல் அத்துமீறல்கள் இங்கு அரங்கேறுகின்றன.

ஆனால் -

மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் சுட்டிக்காட்டுகின்றமை போன்று, சிறுபான்மை சமூகங்கள் மீது மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்களும், அதற்காக நீதி கோருபவர்களும் அதிகாரத் தரப்பினரால் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். இந்த அவலம் - கேவலம் - இந்தத் தேசத்தில் தான் நடந்தேறுகின்றது.

அதேவேளை, மறுபுறத்தில் 'பயங்கரவாதத்தை ஒடுக்குதல்' என்ற பெயரில் ஆட்சித் தரப்பினால் அரச பயங்கரவாதம் கட்டுமட்டில்லாமல் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. அதை யாரும் தட்டி நியாயம் கேட்கக்கூடாது என்று ஆளும் அதிகார வர்க்கம் எதிர்பார்க்கின்றது. அதையும் மீறி யாரேனும் நியாயத்தை எடுத்துரைக்க முற்பட்டால் அவர்களுக்கும் 'துரோகி'ப் பட்டமோ 'பயங்கரவாதி'ப் பட்டமோ இலகுவாகச் சுமத்திவிடும் போக்கே இங்கு கொழும்பில் அதிகம் நிலவுகின்றது.

மனோகணேசன் எம்.பி. சுட்டிக்காட்டுகின்றமை போல, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து யாரும் கருத்துத் தெரிவிக்கலாம். யாரும் வாதிடலாம். எவ்வளவு காலம் வேண்டுமானாலும் அது குறித்துப் பேசலாம். மறுத்தும், ஆதரித்தும் விவாதிக்கலாம். அதில் தவறில்லை.

ஆனால் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவது பற்றிய பிரச்சினையில் இரண்டு கருத்துகளுக்கு இடமேயில்லை. அது குறித்து யாரும் வாதிடவோ, விவாதிக்கவோ முடியாது. அதை எதிர்க்கவோ, தடுக்கவோ முயலக்கூடாது. அப்படி முயல்வது பெரும் தவறும், அநீதியும், குற்றமுமாகும்.

ஆனால் இந்தத் தேசத்தில் என்ன நடக்கின்றது?

'பயங்கரவாதத்தை ஒழிக்கும்' பெயரில் மனித உரிமை மீறல்கள் மோசமாக அரங்கேறுகின்றன. அத்தகைய செயற்பாடுகள் நியாயப்படுத்தப்படுகின்றன.

'பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தால் வெல்தல்' என்ற விநோத - விபரீத - கோட்பாட்டை உள்ளிடையாக வைத்துக்கொண்டு, தமிழர் தேசம் மீது தொடுக்கப்பட்டிருக்கும் கொடூரப்போரையும் அதனோடு சேர்ந்து அரச பயங்கரவாதமாக அரங்கேறும் மிக மோசமான மனித உரிமை மீறல்களையும் 'ஒரு தவறைத் திருத்துவதற்கு இன்னொரு தவறை இழைப்பது தவிர்க்க முடியாதது' - என்ற கோட்பாட்டின் கீழ் நியாயப்படுத்தி, தென்னிலங்கை சிங்கள மக்கள் ஒட்டுமொத்தமாக் ஏற்றுக்கொள்ளும் மனநிலைக்கு வந்திருக்கின்றார்கள். அத்தகைய இழி நிலைக்கு நாட்டு மக்களின் பொதுவான எண்ணப்போக்கு தாழ்ந்து விட்டது.

பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அடக்கி ஆளும் கேலிக்கூத்துக்கு - அநியாயப் போக்குக்கு - வழிவகுப்பதே ஜனநாயகத்தின் பின்னடைவாகும். உயரிய ஜனநாயக விழுமியத்தில் இருக்கின்ற அந்த ஓட்டை, உடைசல் பண்பியல்பைப் பயன்படுத்தியே இலங்கைத் தீவில் பௌத்த - சிங்களப் பேரினவாதம் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களின் உரிமைகளைப் பறித்து, அவர்களின் சுதந்திரத்தை மறுத்து, அவர்களை மூன்றாந்தரப் பிரஜைகளாக - அடிமைகளாக - நடத்தி வருகின்றது.

அப்படி ஜனநாயகப் பண்பியல்பைப் பயன்படுத்தி அநீதி இழைக்கும் சிங்களம் -

ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் அதிகாரத்தைப் பெற்றுத் தமிழரை அடக்கியாளும் தென்னிலங்கை -

தமிழரின் போராட்டத்தை அடக்குவதற்கு மட்டும் அந்த ஜனநாயகக் கோட்பாட்டு முறைகளுக்கு வெளியே போய் அடிப்படை மனித உரிமைகளை மீறும் விதத்தில் செயற்படுவதை எந்த வகையிலும் நியாயப்படுத்தவோ, அங்கீகரிக்கவோ முடியாது.

இதை கொழும்பு அரசின் மனித உரிமை மீறல் போக்கை மௌனம் காத்து அங்கீகரிக்கும் தென்னிலங்கை மக்களும் சர்வதேசமும் புரிந்துகொள்வது அவசியம்.

# உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பாதுகாப்புக்கென மனித உரிமைகள் ஆணைக்குழு புதிதாக சட்டமூலம்

## சட்டமாக்குவதற்கென உரிய அமைச்சிடம் கையளிப்பு

கொழும்பு, ஓக.21

இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான பாதுகாப்பு சட்டமூலம் ஒன்றை மனித உரிமைகள் ஆணைக் குழு வரைந்துள்ளது அதனை சட்டமாக்குவதற்கென உரிய அமைச்சிடம் கையளித்துள்ளது.

இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்து அதனை ஒரு சட்டமூலம் ஆக்குவதற்கான முயற்சிகளில் மனித உரிமைகள் ஆணையம் ஈடுபட்டிருக்கின்றது.

பல வருடங்களாகத் தொடரும் உள்நாட்டு யுத்தம் மற்றும் சுனாமித் தாக்கம், இயற்கை அனர்த்தங்கள், பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் போன்றவற்றினால் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்திருக்கின்றனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து உள்ளவர்களில், போர்ச்சூழலினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து இருப்பவர்கள் நாட்டில் உள்ள ஏனைய மக்களைப் போன்று கௌரவம் மிக்க சுதந்திரமான வாழ்க்கையை வாழ முடியாதவர்களாக இருப்பதாகவும் மனித உரிமைகள் ஆணையகம் குறிப்பிடு கின்றது.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், அவற்றை மேம்படுத்துவதற்குமான சட்ட மூலம் ஒன்றை அது வரைந்திருக்கின்றது.

இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் அதனைக் கையளித்திருப்பதாக மனித உரிமைகள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இடம்பெயருகின்ற மக்களின் உரிமைகளை பல்வேறு நிலைமைகளிலும் பாதுகாத்து, சமூக பொருளாதார அடிப்படையில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே இந்தச் சட்டவரைபின் முக்கிய நோக்கமாகும் என்றும், இந்த வரைவு குறித்து பொது மக்களின் கருத்துக்களை திரட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த ஆணையகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (203)

# மேசையில் அமர்ந்து இருதரப்பும் பேச்சு நடத்த சர்வதேச சமூகம் வற்புறுத்தக் கோரிக்கை

கடந்த இரண்டு மாதங்களில் வன்னியில் இருந்து 112,000 மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றார்கள், எதிர்வரும் இரண்டு வார காலத்தில்



இது இன்னும் அதிகரித்து இரண்டு லட்சத்தை எட்டக் கூடும்.

இவ்வாறு வன்னியில் பணியாற்றி வரும் ஐ.நா. சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் அச்சம் தெரிவிக்கின்றன.

'தமிழ்ஈழம் நியூஸ்' இணையத் தளத்தின் 'ஜெயஸ்' என்பவர் ஓக.19 ஆம் திகதி எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகள் இவை.

இலங்கை அரச படைகள் நடத்தும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள் மற்றும் தினமும் கடல் மற்றும் நில தளங்களிலிருந்து தொடர்ச்சியாக ஏவும் குண்டுத் தாக்குதல்கள் காரணமாக மக்கள் தம் சொந்த வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்து வருகின்றார்கள் என்று அந்த நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இப் பகுதியில் மிக மோசமான அவல நிலைமையொன்று உருவாகி வருவதால் சர்வதேச சமூகம் உடன டியாகத் தலையிட்டு தாக்குதல்களை தடுத்து நிறுத்த வேண்டும். கடந்த இரண்டு மாதங்களில் மக்கள் பல தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர். மரநிழல்களிலும் பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் இடங்களிலும் தங்கியிருக்கும் படியாக மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்குப் போதுமான உணவு வசதியோ, குடிக்கும் தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளோ இல்லை.

இலங்கை அரசாங்கம் தனது பிரஜைகளான ஒரு பிரிவு மக்களை இவ்வித மனிதத்துவமற்ற முறையில் நடத்தி வருவதை சர்வதேச சமூகம் இன்னமும் பெரிதாக சகித்துக் கொண்டு வருவது ஆச்சரியமாக இருக்கின்றது.

இலங்கை அரசாங்கமும் இராணுவமும் உணவையும் மருந்துகளையும் ஆயுதமாகப் பாவித்து வருகின்றன. சர்வதேச சமூகம் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த அளவுக்கு சர்வதேச சமூகத்தினர் சகிப்புத் தன்மையைக் காட்டிவருவதற்கான காரணம் அவர்களுக்கு மட்டுமே தெரியும்.

இலங்கையில் வாழும் தமது சகோதரர்கள் அமைதியாக வாழவேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் ஏங்குகிறார்கள்.

### தொடர்புகள் யாவும் துண்டிப்பு

வன்னிக்கான சகலவிதமான தொடர்புகளையும் தபால் தொடர்புகள் உட்பட படிப்படியாக வெட்டி துண்டித்து விட்டுள்ளது இலங்கை அரசாங்கம். மிக விரைவில் இப்பிரதேசத்தில் அடைமழை பெய்யத் தொடங்கி விடும். இதனால் இன்றைய நிலையை விட மிக மோசமான நிலைமைகளை மக்கள் எதிர்கொள்ள நேரும். தினமும் முன்னேறிவரும் அரச படைகளின் ஷெல் தாக்குதல்களால் இம் மக்கள் பெரும் இழப்புக்களை எதிர்கொண்டு வருகி றார்கள்.

### கருணையற்ற அரசு

சிங்கள ஆட்சியாளர்களுக்கு தமிழ் மக்கள் மீது சிறிதும் கருணை கிடையாது என்று தமிழர்கள் எண்ணுகிறார்கள். பயங்கர வாதத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு இன அழிப்பில் அரசாங்கம் இறங்கியுள்ளது. தனித்துவமான, தெளிவான கலாசாரத்தை கொண்டுள்ள தமிழ் மக்கள் 1948 ஆம் ஆண்டு தொடக்கம் பதவிக்கு வந்த சிங்கள அரசுகளின் தொடர்ச்சியான இன அழிப்பு நடவடிக்கைகளை எதிர் கொண்டு வருகின்றார்கள் தென்னாசியாவில் மிகப் பழைமையான ஜன நாயக நாடு என்று கூறப்படும்



இலங்கையில் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றது.

சர்வதேச சமூகம் உடனடியாக இலங்கை அரசைக் கட்டுப்படுத்த வேண்டும் நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் மக்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும். தமிழர்கள் தமக்கெனக் கொண்டுள்ள தமிழ் தேசத்தில் ருவாண்டா போன்றதொரு நிலைமை உருவாகாமல் சர்வதேச சமூகம் தடுக்க முன்வர வேண்டும். நீண்ட காலமாக தொடர்ந்து கொண்டிருக்கும் வன்முறைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் இலங்கை விடயத்தில் இரண்டு நாடுகளுக்கான தீர்வுத் திட்டம் ஒன்றின் அடிப் படையில் சர்வதேசம் ஒரு கொள்கையை வகுத்துச் செயற்பட வேண்டும். அமைதித் தீர்வு ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் விதத்தில் இரு தரப்பினரையும் மேசையில் அமர்ந்து அர்த்தமுள்ள விதத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு சர்வதேசம் வற்புறுத்த வேண்டும் இதன் மூலம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒரு முடிவைக்காண முடியும். (ப)

# நாளை

| | |
|---|---|
| ஆவணி 06 | 22.08.2008 வெள்ளிக்கிழமை |
| திதி: | ஷஷ்டி மு.இ. 08.44வரை |
| நட்சத்திரம் : | அச்சுவினி |
| | [illegible] 01.37வரை |
| [illegible] | 06.05 - 07.05 |
| ராகுகாலம் : | 10.35 - 12ள.05 |

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

கோப்பாய், ஓக. 21

வடகோவை ஸ்ரீ சக்கரவாழ்வார் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு பொங்கல் வழிபாட்டுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை செஞ் சொற் செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.

சித்திரத் தேரை வடிவமைத்த சிற்பக் கலைஞர் குழு தலைவர் சிற்பக் கலாவித்தகர் தியாகராசா பிரதீபனுக்கு 'சிற்பக்கலா ஜோதி' என்னும் பட்டமும்-

ஆலய ஆஸ்தான நாதஸ்வர கலைஞர் ப.சிவதாஸுக்கு 'இன்னிசை சக்கரவர்த்தி' என்னும் பட்டமும் - வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (203-72)

(சிறப்பு மலர் 6ஆம், 7ஆம் பக்கங்களில்)

# குடும்பஸ்தர் சரண்

யாழ்ப்பாணம், ஓக 21

உயிர் அச்சுறுத்தல் காரணமாக துன்னாலை, அல்லையம்பதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் சரண் அடைந்துள்ளார்.

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக .21

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திரு விழாவை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் இசைக்கச்சேரி இடம் பெறவுள்ளது.

மிருதங்கம் எஸ்.மகேந்திரன், முகர்சிங் எஸ்.விமல்சங்கர். (203)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 21

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந் திருவிழா காலங்களில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று வியாழக் கிழமை 'ஆறுபடை வீடு' என்னும் தலைப்பில் சி.சசீவன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

வட்டுக்கோட்டை கண்ணகி அறநெறிப் பாடசாலை, சித்திர மேழி ஞானவைரவர் அற நெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாண வர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கட்சி தொடங்குகிறார் சிரஞ்சீவி



தெலுங்கு 'சுப்பர்ஸ்டார்' சிரஞ்சீவி புதிய அரசியற் கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளார். தமிழில் ரஜினியைப் போல தெலுங்கில் அசைக்க முடியாத 'ஹீரோவாக' விளங்கும் சிரஞ்சீவி தன்னுடைய படங்களில் அரசியற் கருத்துக்களை அதிகம் இடம் பெறச் செய்து வந்தார். எனினும் எந்த அரசியற் கட்சியையும் ஆதரிக்காத போக்கினையே சிரஞ்சீவி கொண்டிருந்தார்.

இந்நிலையில் சிரஞ்சீவியின் மகள் தன் காதலனுடன் தலைமறைவானதிற்கு காங்கிரஸ் கட்சியே காரணமென சிரஞ்சீவியின் ரசிகர்கள் குற்றஞ்சாட்டினர். 'சிரஞ்சீவி அரசியற் கட்சி யொன்றைத் தொடங்க வேண்டும்' என்ற கோரிக்கையையும் ரசிகர்கள் விடுத்து வந்தனர். சிரஞ் சீவியின் தம்பியும், தெலுங்கு நடிகருமான பவன் கல்யாண் ' சிரஞ்சீவி' புதிய கட்சியை ஆரம்பிக்கப் போகின்றார்' என ரசிகர்களிடம் கூறி வந்தாலும், இது தொடர்பாக சிரஞ்சீவி மௌனத்தையே பதிலாகத் தந்தார்.

எனினும் இப்போது அந்த மௌன விரதத்தை உதறிவிட்டு முதன் முறையாக புதியகட்சி தொடங்குவது பற்றிய வார்த்தைகளை உதிர்த்திருக்கிறார். "ஓகஸ்ட் 26 ஆம் திகதி எனது புதிய கட்சியின் பெயர், கொடி, நிர்வாகிகள் பற்றி உத்தி யோக பூர்வமாக அறிவிப்பேன். முதலமைச்சர் நாற்காலி எனது இலக்கல்ல. ஆந்திரா மக்களின் விடிவே எனது அரசியல் பிரவேசத்திற்கான காரணம்" என்ற சிரஞ்சீவியின் அறிவிப்பு வெளிவந்ததும், அவரது ரசிகர்கள் இந்தியாவின் ஆந்திர மாநிலமெங்கும் பட்டாசுகள் கொளுத்தியும், இனிப்புகள் வழங்கியும் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.




# ரஜினி இழந்த 10 கோடி!



படத்தின் பெயரைப் போல உண்மையிலே ரஜினியைப் பிரச்சினைகளுக்குள் சிக்க வைத்துள்ளது குசேலன்.

ஏகப்பட்ட எதிர்பார்ப்புக்களை கிளப்பிய சுப்பர்ஸ்டார் ரஜினியின் குசேலன் திரைப் படம் மரண அடிவாங்கியுள்ளது. ஒகனேக்கல் நீர்ப்பிரச்சனை தொடர்பாக கன்னட வெறியர்களிடம் ரஜினி மன்னிப்புக் கோரியமையும், படத்தின் சில காட்சிகளிலேயே ரஜினி தோன்றியமையுமே தோல்விக்கான மிகமுக்கிய காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

இந்நிலையில் தான் அடுத்து நடிக்கவுள்ள 'ரோபோ' படப்பிடிப்புக்காக அமெரிக்கா சென்றிருந்த ரஜினி, விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள் கிளப்பிய எதிர்ப்பலை காரணமாக அவசரமாக இந்தியா திரும்பியுள்ளார். விநியோகஸ்தர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்வதற்காக தன்னுடைய சம்பளத்திலிருந்து 10 கோடி (இந்திய) ரூபாவை ரஜினி கொடுத்துள்ளார்.

ஆயினும் குசேலனால் ஏற்பட்ட நஷ்டம் 40 கோடி (இந்திய) ரூபா எனத் திரையரங்க உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

''ரஜினியின் மிகப்பெரிய தோல்விப்படமான 'பாபா' கூட இந்தளவு நஷ்டத்தை ஏற்படுத்தவில்லை. அப்போது பாபாவின் தயாரிப்பாளராக ரஜினி இருந்தமையால் எங்களுடைய பணத்தை அவர் திருப்பித் தந்தார். ஆனால் இப்போது எங்களுடைய பணத்தை அவர் தர வேண்டிய தில்லை. ஆனால் குசேலன் படத்தை தயாரித்த கவிதாலயா நிறுவனமும், செவன்த் சனல் நிறுவனமும் எங்களுக்குரிய இழப்பீட்டைத் தரவேண்டும். இல்லாவிட்டால் இனிவரும் காலங்களில் இவ்விரு நிறுவ னங்களும் தயாரிக்கும் படங்களுக்கு ஒத்துழைப்புத் தரமாட்டோம். ஆனால் எங்களுக்காக சுப்பிர்ஸ்ரார் ரஜினி தன்னுடைய பணத்தை இழக்க வேண்டாம். எங்களை வாழ வைக்கும் தெய்வம் அவர்தான்'' எனத் தென்னிந்திய திரையரங்க உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆங்கிலப் படங்களுக்கு நிகரான ஈழத்தமிழர் படம்



புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வாழும் ஈழத்தமிழரான கே.எஸ்.துரையின் நெறியாள்கையில் 'இளம்புயல்' என்ற திரைப்படம் நோர்வே, டென்மார்க், இந்தியா என உலகின் பலபாகங்களிலும் - படத்தின் பெயரைப்போலவே- புயல் வேகத்தில் படமாக்கப்பட்டு வருகின்றது.

இத்திரைப்படத்தின் நாயகனாக நெறியாளரின் மகனான 'வசந்த்' என்பவர் அறிமுகமாகின்றார். திரைப்படத்தின் இசையமைப்பையும் கதாநாயகனான வசந்தே பொறுப்பேற்றிருக்கிறார். இவருடன் இந்தியத்திரை நட்சத்திரங்களான பூர்ணிதா, கருணாஸ், ஸ்ரீமன், சுஜிபாலா போன்றோர் இணைந்து நடித்துள்ளனர்.

விஞ்ஞான தொழினுட்பத்தின் உச்சத்தை எட்டிநிற்கும் ஒரு குடும்பத்தில் திடீரெனக் கொலைகள் நிகழ்கின்றன. இவற்றினை நாயகன் 'ஜேம்ஸ்பொன்ட்' பாணியில் துப்பறிவதே படத்தின் கதையாகும். ஆங்கிலப் படங்களுக்கு நிகரீகப் படமாக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் விரைவில் திரையிடப்படவுள்ளது.

இப்படத்தின் பாடல்களின் ஒலிநாடா வெளியீடு அண்மையில் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பிரபல தயாரிப்பாளரான ஆர்.பி.சௌத்திரி, இயக்குநர்களான அமீர், வசந்த் உள்ளிட்ட பல திரைப்பலங்கள் பங்கு கொண்டனர். படத்தின் பாடல்களையும், 'ட்ரெய்லரையும்' பார்த்துப் பிரமித்துப்போன தென்னிந்திய திரைப்பிரமுகர்கள் 'மிகப்பெரிய வெற்றிப்படமாக 'இளம்புயல்' திரைப்படம் அமையும், வசூலையும் வாரிக்குவிக்கும்!'' என வாழ்த்தியுள்ளனர். ''ஈழத்தமிழர்களின் கலைத்திறமையை உலகெங்கும் பறைசாற்றும் படமாக 'இளம்புயல்' அமைய வேண்டும்'' என்பதே இயக்குநரின் எதிர்பார்ப்பாகும்.




# சந்திரகிரகணம் எல்லோரும் பார்க்கக்கூடிய சலிக்காத ஓர் அற்புதக் காட்சியாகும்.....!

இரு வாரங்களுக்கு முன்னர், அதாவது ஒகஸ்ட் 1முதலாம் திகதி சூரிய கிரகணமொன்று நடைபெற்றது. அது யாழ்ப்பாணம் உட்பட இலங்கையிலும் தென்பட்டது. அது பற்றிய விளக்கக்கமான கட் டுரை 03.08.2008 அன்று உதயனில் வெளிவந்திருந்தது. அதே மாதத்தில் (ஒகஸ்டில்) 17.08.2008 அன்று சந்திர கிரகணமொன்றும் நடைபெற்றது. அது பற்றியும் இப்போது பார்ப்பது மிகப் பொருத்தமான தொன்றாகும்.

இங்கு காணப்படும் புகைப்படங்கள் 17.08.2008 அன்று ஏற்பட்ட சந்திர கிரகணத்தின் போது எடுக்கப்பட்டவையாகும். இக் கிரகணம் 16.08.2008 அன்று சனிக் கிழமை இரவு 11.53 அளவில் ஏற்படும் என்று எதிர்வு கூறப்பட்டிருந்தாலும், 17.08.2008 அன்று அதிகாலை 1.00 மணிவரை கிரகணம் நிகழவில்லை. கிட்டத்தட்ட 1.10 மணியளவிலேயே கிரகணம் ஆரம்பமாகியது. அந்நேரம் கருமுகில் கூட்டங்கள் சந்திரனை மறைத்ததால் உடனடியாகப் படம் பிடிக்கமுடியவில்லை. ஆயினும் அதிகாலை 1.16 மணியளவில் அதனைத் தெளிவாகப் படம்பிடிக்க முடிந்தது. பின்னர் சந்திரன் மறையும் பகுதி மெல்லமெல்ல அதிகரித்து கிட்டத்தட்ட 2.40 மணியளவில் சுமார் 95 வீதம் மறைக்கப்பட்டது. அதன் பின்னர் நிழல் விலகத்தொடங்கி சந்திரன் மீண்டும் வளரத் தொடங்கியது. அதிகாலை 2.50 மணியின் பின்னர் கரு மேகங்கள் சந்திரனை முற்றாக மறைத்ததால் மேற்கொண்டு நிகழ்வை படம்பிடிக்கவில்லை.

சூரிய கிரகணத்துக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அளவிற்கு சந்திர கிரகணத்திற்கு கொடுக்கப்படுவதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. சூரியனை நாம் பகல் முழுவதும் அவதானிக்கின்றோம். எனவே, பகலில் ஒரு மாற்றம் நடைபெறும் போது அதனை ஆவலுடன் நோக்குகின்றோம். ஆனால், சந்திர கிரகணம் வளமையாக நள்ளிரவுக்குப் பின்னரே நடைபெறும். அவ்வேளையில் மக்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதால் அதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. இதைவிட சூரிய கிரகணத்திற்கு விஞ்ஞானிகளும் முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். பூமிக்கு மிக அருகில் உள்ள உடு (கிரகம்) சூரியன் ஆகும். அதனால் சூரியனின் மேற்பரப்பை ஆராய்வதன் மூலம் மில்லியன் கணக்கான ஏனைய உடுக்களின் இயல்புகள் பற்றி அறிந்து கொள்ளலாம் .இவ்வாறு சூரியனின் மேற்பரப்பின் தன்மையை ஆராய்வதற்கு சூரிய கிரகணம் ஏற்படும் நாளே மிகவும் சிறந்ததாகும். இவ்வாறானதொரு தேவை சந்திர கிரகணத்திற்கு இருப்பதில்லை.

சூரிய கிரகணம் நடைபெறும்போது சூரியனில் இருந்து புறப்படும் ஒளிக்கதிர்கள் அதை மறைக்கும் சந்திரனில் விளிம்புகளில் பட்டு முறிவடையும். அவ்வாறு முறிவடைந்து வரும் கதிர்களில் அதிகம் முறிவடைவது கழியூதா ( ULTRA VIOLET ) கதிர்களாகும். அக்கதிர்கள் எமக்கும் பலவிதமான கெடுதல்களைக் கொடுக்கவல்லன. அதனாலேயே அதுபற்றி எச்சரிக்கவேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. இதனால் சூரிய கிரகணம் செய்திகளில் முதலிடத்தைப் பிடிப்பதற்கு இதுவும் ஒரு காரணம். ஆனால் சந்திர கிரகணம் நடைபெறும்போது அவ்வாறான பாதிப்புகள் எதுவும் ஏற்படுவதில்லை.

## சூரிய,சந்திர கிரகணங்கள் சோடியாக நிகழ்வதே இயற்கை!

### சந்திர கிரகணம் ஒரு அற்புதக் காட்சியாகும்.

சூரிய கிரகணம் போன்றே சந்திர கிரகணமும் பார்த்து ரசிக்கக்கூடிய கண்கொள்ளாக் காட்சியாகும். அற்புதக் காட்சியாகும். கிட்டத்தட்ட 3 மணிநேர இடைவெளிக்குள் பூரணை நிலவிலிருந்து அமாவாசை நிலவுவரை ஒரேயடியாகக் காணமுடியும். கிரகணங்களானவை, பூமி , சந்திரன் போன்றவற்றின் நிழல்கள் ஒன்றின் மீது ஒன்று படுவதால் ஏற்படுகிறது. சந்திரனின் நிழல் பூமியில் படுவதை சூரிய கிரகணம் என அழைத்தோம். (உதயன்-03.08.2008) அதே போன்று பூமியின் நிழல் சந்திரனில் விழுவதை சந்திரகிரகணம் என அழைக்கின்றோம் - பார்க்கின்றோம்.

சந்திர கிரகணம் நடைபெற வேண்டுமெனில் சூரியன் - பூமியை இணைக்கும் நேர்கோட்டில் சந்திரன் பூமிக்குப் பின்புறமாக வேண்டும். சந்திரன் அவ்வாறு இருக்கும் நாளையே நாம் பூரணை (பௌர்ணமி) என்கிறோம். எனவே முழு நிலவு நாளிலேயே சந்திர கிரகணம் எற்பட வாயப்புண்டு. அப்படியானால் ஒவ்வொரு பௌர்ணமி நாள்களிலும் சந்திர கிரகணம் ஏற்பட வாய்ப்புண்டு என நீங்கள் கருதலாம்.

### இராகுவும் கேதுவும் எங்கே நிற்கின்றன

அதுதான் இல்லை. பூமி சூரியனைச் சுற்றும் தளமும், சந்திரன் பூமியைச் சுற்றும் தளமும் ஒரே தளம் அன்று. அவற்றிற்கிடையேயான கோணம் சுமார் 5 பாகை ஆகும். இதனால் சந்திரனின் பாதை, பூமி சூரியனைச் சுற்றும் தளத்தை இரண்டே புள்ளிகளில் மட்டுமே வெட்டும். இந்த இரண்டு புள்ளிகளைத்தான் இராகு, கேது என எமது வானியல் ஆய்வாளர்கள் அழைத்தனர். இராகு - கேதுவை இணைக்கும் கோடும், பூமி - சூரியனை இணைக்கும் கோடும் ஒன்றாகப் பொருந்துவது வருடத்தில் இரண்டே இரண்டு தடவைகள் தான் வரும். இந்த இராகு - கேதுக்களை கணுக்கள் என அழைப்பர். கணுக்களை இணைக்கும் கோடு, பூமி - சூரியனை இணைக்கும் கோட்டிற்கு அண்மையில் இருக்கும் காலங்களைக் கிரகண காலங்கள் என அழைப்பர். இந்தக் காலங்களிலேயே கிரக ணங்கள் நிகழலாம்.

### சந்திரனின்மற்றொரு வகை இயக்கம்

அப்படியானால் கிரகணங்கள் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட ஒரே நாளில்தானே புலப்பட வேண்டுமென நீங்கள் சிந்திப்பீர்கள். ஆனால் அப்படி நடைபெறுவதில்லை. இதற்கு சந்திரனின் இன்னொரு வகையான இயக்கம் காரணமாகிறது.

பம்பரமொன்று சுற்றுவதை அவதானித்துப் பாருங்கள். பம்பரம் முதலில் விறைப்பாக நேராகச் சுற்றும். சற்று நேரம் கடந்ததும் பம்பரம் தள்ளாடும். அப்போது பம்பரத்தின் அச்சும் சுற்றும். இது போன்றே ராகு கேது கோடும் ஒரே நிலையில் அமைவதில்லை. பம்பரத்தின் அச்சு சுழல்வது போல இக் கோடும் சுழல்கிறது. இக் கோட்டின் சுழற்சிக்காலம் 18.6 ஆண்டுகளாகும். எனவே ஒரே மாதிரியான கிரகணம் 18.6 ஆண்டுகளுக்கு ஒரு முறையே நிகழும்.




படம் 1

### சோடியாக நடைபெறும் கிரகணங்கள்

மேலும் இரு தளங்களுக்கு மிடையேயான சாய்வு மிகவும் சிறியதாகையாலும், சூரியனினதும், சந்திரனினதும் கோணப்பருமன்கள் கிட்டத்தட்ட 1/2 இற்கு அண்மையில் மாறுபடுவதாலும், சூரியனும், சந்திரனும் சரியாக கணுக்களைக் கடக்கும் நாளுக்கு முன்னும், பின்னும் பல நாள்களுக்குள் கிரகணங்கள் நடைபெற சாத் தியம் உண்டு. இதனாலேயே கிரகணங்கள் எப்பொழுதும் சோடிகளாகவே தோன்றும். சூரிய கிரக ணம் நடை பெற்று 14-75 நாள்களின் பின்னர் சந்திர கிரகணம் நடைபெறும். சூரியன் கணுக்களை ஒரு வருடத்தில் மார்ச், செப்ரம்பர் மாதங்களில் கடந்தால், அடுத்த வருடத்தில் பெப்ரவரி, ஓகஸ்ட் மாதங்களில் கடக்கும். கிரகண காலங்களுக்கு இடைப்பட்ட காலம் அரை வருடத்திலும் குறைவானதாகும். எனவே முதலாவது கிரகண காலம் தை மாதத்தில்



கலாநிதி
நாகலிங்கம்
சிவயோகன்
(சிரேஷ்ட விரிவுரை
யாளர் பௌதிகவியல்
துறை,
யாழ்.பல்கலைக்
கழகம்)

(11 ஆம் பக்கம் தொடர்ச்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடி வென்றது இந்தியா

தம்புள்ள, ஓக. 21

இலங்கைக்கு எதிராக நேற்று தம்புள்ள யில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் கடைசி வரை போராடி மூன்று விக்கெட்டுகளால் வென்றது பாரதம்.

இதன் மூலம் கடந்த திங்களன்று இதே தம்புள்ள மைதானத்தில் எட்டு விக்கெட் டுகளால் இலங்கையிடம் முதல் ஒருநாள் ஆட்டத்தில் தோற்றதன் பழியைத் தீர்த்துக் கொண்டது இந்தியா.




முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் நாண யச் சுழற்சியில் வென்று, துடுப்பாட்டத்தை முதலில் தெரிவு செய்து படுதோல்வியை வாங்கிக் கட்டிக் கொண்ட பாரதம், நேற்று நாணயச் சுழற்சியில் வென்று கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இலங்கையை துடுப்பெடுத்தாடக் களமிறக்கி, வெற்றி யைத் தனதாக் கிக் கொண்டது.

நேற்றைய ஆட்டத்தில் முத லில் துடுப் பெடுத்தாடிய இலங்கை சகீர்கான், பி.குமார், ஹர்பஜன் சிங் ஆகியோர்களது பந்து வீச்சில் சுருண் டது. ஆரம்பம் முதலே அடுத்தடுத்து சரிந்த இலங்கை விக்கெட்டு களால் இந்தியாவின் பிடி இறுகியது.

இலங்கையின் முதல் நான்கு விக்கெட் டுகளும் வெறும் 11 ஓட் டங்களுக்கு முன் சரிந்தமை இலங் கைக்கு பேரதிர்ச்சியாய் அமைந்தது.ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டு களை இழந்து 44 ஓட் டங்களை மட்டும் பெற்றிருந்த இலங்கையின் மானத்தை டில்ஷான் (16ஓட்டங்கள்), நுவன் குல சேகரா( 25 ஓட் டங்கள்), தி.துஷார (44ஓட் டங்கள்) ஒரு வாறு காத்தனர்.

தட்டுத் தடுமாறி 38.3 ஓவர்களில் 142 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக் களையும் இலங்கை இழந்தது.

சஹீர்கான் 21 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுகளையும், பி.குமார் 34 ஓட்டங்க ளுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் சிங் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும்,பதான் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா 39.4 ஓவர்க ளில் 7 விக்கெட்டுகளுக்கு 143 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

இந்தியாவின் துடுப்பாட்டமும் தடுமாற் றம் நிறைந்ததாகவே இருந்தது. ஒரு கட் டத்தில் அது 5 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்று தட்டுத் தடு மாறிக் கொண்டிருந்தது.

எனினும், வி. கோஹில் (37 ஓட்டங்கள்), யுவராஜ் சிங் (20 ஓட்டங்கள்), அணித் தலை வர் டோனி (39 ஓட்டங்கள்), பத்தி நாத் (ஆட்ட மிழக்காமல் 27 ஓட்டங்கள்) ஆகியோர் இந்தியாவை வெற்றிப் பாதையில் தூக்கி நிறுத்தினர்.

குலசேகர, துஷார, மெண்டிஸ் ஆகி யோர் தலா இரு விக்கெட்டுக்களையும், பெர்ணான்டோ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முத்தையா முரளிதரனால் எந்த விக் கெட்டையும் நேற்று வீழ்த்த முடிய வில்லை.

நேற்றைய ஆட்டத்தின் ஆட்ட நாய கனாக சகீர் கான் தெரிவு செய்யப்பட்டார்.

ஐந்து ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரில் இப்போது இரு அணி களும் 1 - 1 என்ற சமநிலையில் உள் ளன.

அடுத்த - மூன் றாவது - ஒருநாள் ஆட் டம் கொழும்பு பிரே மதாஸ மைதா னத்தில் வரும் 24ஆம் திகதி பகல் - இரவு ஆட் டமாக நடைபெறவுள்ளது.

(சி)

## மன்மோகன்சிங், சோனியா, கருணாநிதிக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படும்

சென்னை, ஓக. 21

சென்னை பல்கலைக்கழக 150ஆவது ஆண்டு விழாவில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முதல



மைச்சர் கருணாநிதி ஆகியோருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள் ளது.


சென்னைப் பல்கலைக்கழக 150ஆவது ஆண்டு நிறைவு விழா செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி நடக்கவுள்ளது.

விழாவில் சிறப்பு அழைப்பாளர்களா பிரத மர் மன்மோகன் சிங், சோனியா காந்தி, முதல மைச்சர் கருணாநிதி ஆகியோர் கலந்துகொள் கிறார்கள். அவர்கள் 3 பேருக்கும் அவர்களின் அரசியல் மற்றும் பொதுநலச்சேவையைப் பாராட்டிச் சென்னை பல்கலைக்கழகம் சார் பில் டாக்டர் பட்டங்களை ஆளுநர் பர்னாலா வழங்குகிறார்.

## சந்திரகிரகணம்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜூன் நடுப் பகுதியிலும், மூன்றாவது டிசம்பரிலும் ஏற் படும். இவ்வாறு ஆகக் கூடியது ஒரு வரு டத்தில் ஏழு கிரகணங்கள் வரை இருக்கலாம்.




படம் 2

இங்குள்ள படம் 1 பூமியின் நிழல் எவ்வாறு சந்திரனில் விழு கிறது என்பதைக் காட்டு கிறது. கருநிழல் (Umbra) பகு திக்குள் சந்திரன் செல்லும்போது பூரண சந்திர கிரகணமும், அக நிழல் (Penumbra) பகுதிக்குள் சந்திரன் செல்லும் போது பகுதி சந்திர கிரகணமும் ஏற்படுகிறது.

பூரண சந்திர கிரகணம் ஏற்படும் போது சந்திரன் முழுக் கறுப் பாகத் தெரியாது. முதலில் கறுப்பாகிக் கொண்டு சென்றாலும் திடீ ரென ஊதா நிறமாக அல்லது பிரகாசமான சிகப்பு நிறமாக மாறி பின்னர் முழுமையாக மறையும். இவ்வாறு நிறங்கள் தோன்றுவது பூமியின் சூழலில் உள்ள தூசுகளினா லாகும். இத் தூசு படலங்கள் ஓர் அரியம் போல் தொழிற்பட்டு சந்திரனிற்கு செல் லும் சூரியக் கதிர்களை வளைக்கும் இவ் வாறு வளைக்கப்படும் போது சில நிறங் கள் கூடுதலாக வளைக்கப்பட்டு அந்நிறங் கள் எமக்குப் புலப்படும். சந்திர கிரகணத்தை நாம் நேரடியாக வெற்றுக் கண்களால் பார்க் கலாம். ஏனெனில் நாம் சந்திரனில் பட்டுத் தெறித்து வரும் சூரிய ஒளியையே பார்க் கிறோம். அவை எமது கண்களுக்கு எவ் வித கெடுதல்களையும் கொடக்காது. எனவே இன்னொரு முறை சந்திரகிரகணம் நிகழும் போது நிச்சய மாக அந்தக் கண் கொள் ளாக் காட்சியைப் பார்த்து மகிழுங்கள்.

படம் 2 இல் பூமியின் நிழலினூடு சந் திரன் 17.08.2008 அன்று சென்ற பாதை காட்டப்பட்டுள்ளது. பூமியின் கருநிழல் சந்திரனின் நிலையில் எங்களுக்கு 0.6876 பாகை கோண ஆரையையும், அகநிழல் 1.2141 பாகை கோண ஆரை யையும் ஆக்குகின்றது. சந்திரன் பூமியின் அக நிழலினுள் நிற்கும் அரைக்காலம் 2 மணி 45 நிமிடம் 18 செக்கன்கள் ஆகும். கரு நிழலினுள் நிற்கும் அரைக்காலம் 1மணி 34 நிமிடம் 05 செக்கன்கள் ஆகும். படத்திலே சந்திரன் வலமிருந்து இடமாக நிழலினூடு சாய்வாக மேற்புறம் செல் வதை அவதானியுங்கள். முதலில் சந்தி ரன் பூமியின் அக நிழலினுள் பிரவேசிக் கின்றது. (P1) பின்னர் அது கருநிழ லுள்ள பகுதிக்குள் சென்று மீண்டும் அக நிழல் பகுதினூடாக வெளியேறுகின்றது. கரு நிழலினுள் சந்திரன் முற்றாக அமிழ்ந் திருந்தால் எங்களுக்குப் பூரண சந்திரகிர கணம் தெரிந்து இருக்கும். ஆனால் இம் முறை கருநிழலைவிட்டு சற்று விலகிய திசையிலேயே சந்திரன் சென்றுள்ளது.

மேலும் 03.08.2008 அன்று உதய னில் வெளிவந்த சூரிய கிரகணப்படங் களை மீண்டும் கவனமாக அவதானித்துப் பாருங்கள். அப்போது சந்திரனின் நிழல் பூமியில் வலமிருந்து இடமாகச் செல்வதால் முதலில் சூரியனின் இடது பக்கம் மறை யத் தொடங்குகிறது. ஆனால் சந்திர கிர கணகத்தின் போது பூமியின் நிழல் இடமி ருந்து வலமாக செல்வதால் முதலில் இடது பக்கமே மறையத் தொடங்குகிறது. இதனை இன்று தொடுக்கப்பட்டுள்ள சந்திர கிரகணப் படங்களில் தெளிவாக அவதானிக்கலாம்.


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1012 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம் 30 33 40 54

19-08-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 4032389 - 4048711

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 356,482 | 10/- | 3,564,820/- |
| 2 இலக்கங்கள் | 32,680 | 20/- | 653,600/- |
| 1 இல. + லக்கினம் | 32,270 | 30/- | 968,100/- |
| 2 இல. + லக்கினம் | 2,973 | 100/- | 297,300/- |
| 3 இலக்கங்கள் | 865 | 500/- | 432,500/- |
| 3 இல. + லக்கினம் | 92 | 5,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,876,320/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 425,372 | | 7,376,320/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,795,600/-

தொடர் இல. 5911050 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஆகஸ்ட் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 4039023-2-88 |
| மாத்தளை | 4041534-8-92 |
| கண்டி | 4040921-8-92 |
| மாத்தறை | 4035281-4-07 |
| கம்பஹா | 404128[illegible] |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# மரண அறிவித்தல்கள்

## சின்னாண்டி ஞானசேகரம்(ஞானம்)

கைதடிமேற்கு, உதயநகரைச் சேர்ந்த சின்னாண்டி ஞான சேகரம் (ஞானம்) நேற்று(20.08.2008)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னாண்டி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, தம்பிராசா மற்றும் அப்புத்துரை, பூமணி, சாந்தன், சபித்தா, றஜித்தா, றஜிதரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2008) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உதயநகர்,*
*கைதடி மேற்கு.* (A)

தகவல்:
க. சிவகரன்
(கர்ணன்- பேரன்).

## திருமதி லீலறோஜினி இராஜகோபாலு



மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத் தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட திருமதி லீலறோஜினி இராஜகோபாலு 19.08.2008 செவ்வாய்க் கிழமை அதிகாலை கொழும்பில் சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு செல் லத்துரை மற்றும் ஜெயலட்சுமி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற இராமலிங்கம்- அன்னம்மா தம்பதியரின் மருமகளும் இராஜகோபாலுவின் அன்பு மனை வியும் விமலறோஜினி, புஷ்பறோஜினி, சகீலறோஜினி, லலி தரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பகீரதன், உதயா, குலரஞ்சிதா ஆகியோரின் தாயாரும் றஜிதா, முகுந்தன் ஆகி யோரின் மாமியாரும் ஜிலுக்ஸன், லருஜன் ஆகியோரின் பேர்த் தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2008) வியாழக் கிழமை ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் அல்லாரை கொற்புலவு இந்துமயானத்தில் தகனஞ்செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீனாட்சி அம்மன் கோயிலடி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (சி-554242)

தகவல்:
குடும்பத்தினர்.

## நாகலிங்கம் பாலசிங்கம்



புளியங்கூடல், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, யாழ்ப்பா ணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாக லிங்கம் பாலசிங்கம் நேற்று (20.08.2008) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாக லிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற பராசக்தி மற்றும் கௌரீஸ்வரி, திலகவதி, அப்புலிங்கம், இரத்தினபூபதி, கமலாதேவி, மகாலிங்கம் ஆகியோரின் சகோ தரனும் காலஞ்சென்றவர்களான சீவரெத்தினம் மற்றும் தெய் வேந்திரம், மகாலிங்கம், கமலாம்பிகை, கந்தசாமி, இரத்தினசிங் கம், கனகரட்ணம், தங்கம்மா, காலஞ்சென்றவர்களான பொன் னம்மா, பொன்னுத்துரை, அன்னம்மா, முத்தம்மா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், அன்ன லட்சுமி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, சீவரெத்தினம் மற்றும் அன்னலட்சுமியின் சகலனும் நிர்மலாவின் அன்புத் தகப்பனும் காந்தரூபனின் மாமனாரும் தனுஷாந், தனுசிகன் ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2008) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மலர்வாசா'*
*211, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (77364)

தகவல்:
நா. அப்புலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் ஒரு வருடத்தில் வடக்கை முழுமையாக மீட்டுவிட்டு அங்கு கிழக்கின் தீர்வு வழங்கப்படும்

## ஜனாதிபதி மஹிந்த சொல்கிறார்

கொழும்பு, ஓக. 21

இன்னும் ஒரு வருடத்திற்குள் நாட் டின் வடக்கை முழுமையாக மீட்டுவிடுவோம். அதன் பின்னர், கிழக்குக்கு வழங்கப்பட்ட தீர்வினை வடக்குக்கும் வழங்குவேன்.

பயங்கரவாதிகளை ஒழிக்க மக்கள் எமக்கு ஆணை வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அப்போது மேலும் தெரிவித்ததாவது:-

**பயங்கரவாதிகளை ஒழிக்க மக்கள் ஆணை தரவேண்டும்**

விடுதலைப்புலிகள் என்னைக் கொல்ல முயற்சிக்கின்றனர். பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண நான் தயாராகவுள்ளேன். ஆனால் போராட்டத்தில் ஈடுபடும் 5 ஆயிரம் பேரையும் நான் எவ்வாறு சந்திக்க முடியும்? பல்கலைக் கழக மாணவர் போன்று புலிகளின் தற்கொலை குண்டுதாரி ஊடுருவி தாக்குதல் நடத்தினால் என்ன செய்வது? பயங்கரவாதிகளை நாம் ஒழித்து வருகின்றோம்.



எமது நடவடிக்கை தொடர்வதற்கு மக்கள் ஆணை வழங்க வேண்டும் - என்று கேட்டுக்கொண்டார். (அ)

# யாழ். பல்கலைக்குத் தெரிவான தென்னிலங்கை மாணவர்களின் பெற்றோர்கள் சத்தியாக்கிரகம்

கொழும்பு, ஓக. 21

தென்னிலங்கை மாணவர்கள், யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்களின் பெற்றோர்கள் நேற்றுமுன்தினம் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்தின் முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர் இதற்கு உரிய முடிவு கிட்டும்வரை இப் போராட்டம் தொடரப் படும் எனவும் அவர்கள் கூறினர்.

'பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே பெற்றோர் தமது பிள்ளைகளை யாழ்ப்பாணம் அனுப்ப மறுக்கின்றனர். இதற்கு இன முரண்பாடுகள் காரணம் அல்ல. அத்துடன் இவர்கள் இனவாதிகளும் அல்லர்.' - எனப் பல்கலைக்கழக உள்ளக மாணவர் தீர்வுக்குழுவின் அமைப்பாளர் உதுள் பிரேமரத்ன தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 306 பேர் யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்திருந்தது. இதில் வெளியிடங்களில் இருந்து 23 பேர் மருத்துவ பீடத்திற்கும், 80 பேர் முகாமைத்துவ பீடத்திற்கும், 20 பேர் சட்ட பீடத்திற்கும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களின் பெற்றோர் ஏற்கனவே மானிய ஆணைக்குழுவிடம் பிள்ளைகளின் பாதுகாப்பின்மையையும், போக்குவரத்து வசதிகளின்மையும் ஏனைய வசதிக்குறைபாடுகளையும் காரணங்காட்டியே அப்பகுதிக்கு அனுப்ப மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

பலமுறை இவர்கள் மறுப்புத் தெரிவித்திருந்தும்கூட அதனைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலட்சியப்படுத்தி விட்டது எனத் தெரியவருகிறது. இது தொடர்பாக முடிவெடுக்க கடந்த ஓகஸ்ட் 14 ஆம் திகதி கூட்டப்பட்ட கூட்டத்திற்கும் மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன், இவ்வாலோசனைக் கூட்டங்களின் போதும் எதுவிதமான சரியான தீர்வுகளும் முன்வைக்கப்படவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் விசனம் தெரிவித்தனர். (சி)

## மேர்வினுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

அமைச்சர் மேர்வின் சில்வாவை உடன் கைது செய்யுமாறு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டும் அந்த உத்தரவைச் செயற்படுத்துவதற்கு பொலிஸ்மா அதிபர் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி அவருக்கு எதிராக இன்று ஊடகவியலாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ளனர்.

ஐந்து ஊடக அமைப்புகளின் ஏற்பாட்டில் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத் திற்கு முன்னால் இன்று நண்பகல் 12 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகி நடைபெறும்

## இந்தியாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்தில் இலங்கைக் கப்பல் மூழ்கி விட்டது என்றும்-

கப்பலில் பணியாற்றிய 17இலங்கை சிப்பந்திகளில், கப்பலின் பிரதம பொறியியலாளர் தவிர்ந்த ஏனையோர் காப்பாற்றப் பட்டுள்ளனர் என்றும்- துறைமுகச் செயலாளர் செய்யது பார்ஹெட் அகமட் தெரிவித்தார்.

கடற்படையினரும், கரையோரக் காவற் படையினரும் தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் கோரப்பட்டு தேர்தல் நடத்த தேர்தல் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

எனினும் அந்தத் தேர்தலும் குடாநாட்டின் இயல்பு நிலை இல்லை என்ற காரணம் காட்டப்பட்டு ஆறுமாத காலத்துக்கு பிற்போடப்பட்டிருந்தது.

இத்தகைய பின்னணியில் -

குடாநாட்டில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த தாம் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். (அ-1)

# ஒலிம்பிக் பதக்கம்; இலங்கையின் கடைசிக் கனவும் நேற்றுக் கலைந்தது

பீஜிங், ஓக. 21

பீஜிங்கில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெறும் இலங்கையின் கடைசிக் கனவும் கலைந்து போயிற்று.

200 மீற்றர் போட்டியில் அரை இறுதிக்கு தகுதி பெற்றிருந்த சுஸந்திகா ஜயசிங்க நேற்று மாலை நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் 7ஆம் இடத்துக்கு தள்ளப் பட்டார். அத்துடன் அந்தப் போட்டியில் இருந்து வெளியேறினார்.

இலங்கை சார்பில் கலந்து கொண்ட எட்டு வீர, வீராங்கனைகளும் பதக்கம் எதுவும் பெறாத நிலையில் தாயகம் திரும்புகின்றனர். (அ-1)

## அரசுடனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்டம் விரைவில் விடுவிக்கப்படும் என அரசு உறுதியாக இருக்கிறது.

பயங்கரவாதத்தை தோற்கடித்து சமாதானத்தை நிலைநாட்ட எடுக்கப்படும் திட்டங்களுக்கு ஊடகங்கள் உதவ வேண்டும் - என்று கேட்டுக்கொண்டார். (அ-1)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று வியாழக்கிழமை நடைபெற இருந்த கப்பல் சேவை நடைபெறமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தில் பிரயாண அனுமதிச் சீட்டை ஏற்கனவே பெற்றுக் கொண்டவர்கள் தமது அனுமதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு மறுதினம் தமது பயணத்தை மேற்கொள்ளுமாறும் -

வடமாகாண விளையாட்டுப் போட்டிக்கு இன்று பிரயாண ஒழுங்கு செய்யப் பட்டுள்ள மாணவர்களை நாளை பிரயாணம் செய்யுமாறு கப்பல் சேவை தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

## அநுராதபுரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரை சேவையில் ஈடுபடுத்துமாறு அவசரகோரிக்கைவிடுக்கப் பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்தினவிடம் இந்த அவசர கோரிக்கையை நேற்று மாலை விடுத்துள்ளார்.

தேர்தல் வன்செயல்கள் காரணமாக அந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் இருப்பதாக தேர்தல் ஆணையாளர் தமது கடிதத்தில் பொலிஸ்மா அதிபருக்குத் தெரியப் படுத்தியுள்ளார்.

சுதந்திரமான, நேர்மையான தேர்தல் அங்கு இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறும் தேர்தல் ஆணையாளர் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுள்ளார். (அ-1)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையது என்ற சந்தேகத்தின் பேரில் நீதிமன்றின் உத்தரவின் பேரில் மூடப்பட்டிருந்த அச்சுக்கூடம் ஒன்றுக்கு அருகில், காவல் கடமையில் இருந்த சமயமே இத் தாக்குதலுக்கு இலக்காகி அவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக கொட்டாஞ்சேனைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பஸ்சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தம்பிக்கும் அபாயம் குறித்து நேற்று செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

பலாலி படைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

தளபதியின் அறிவுறுத்தலின் பேரில் பலாலி பிரதான சிவில் இணைப்பதிகாரி பெற்றோலியம் கூட்டுஸ்தாபனத்தின் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டதன் பயனாக டீசல் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டப் பயணிகளுக்கான போக்குவரத்துச் சேவையை கிரமமாக எவ்வித தடையுமின்றி நடத்த வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டு மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் சிவில் நிர்வாகத்தை சீராகவும் தடங்கலின்றியும் மேற்கொள்வதற்கும் பாதுகாப்புத்தரப்பினர் எப்போதும் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கி வருவதுடன் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு மேற்படி தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

# ஊரடங்கு நேரத்தில் நடமாடியவர் கைது

ஊரடங்கு நடைமுறையில் இருந்த வேளை, கரவெட்டி இராணுவ முகாமுக்குச் சமீபமாக நடமாடியவர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்ட பண்டத்தரிப்பு, காலையடி யைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சண்முகதாஸ் (வயது - 44) என்ற குறிப்பிட்ட நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸார் பிரஸ்தாப நபரை பருத்தித் துறை நீதிவான் க.அரியநாயகம் முன் நேற்று ஆஜர் செய்தனர்.

பிரஸ்தாப நபரை யாழ்.சட்ட வைத்திய அதிகாரி முன் சோதனைக்கு உட்படுத்தி வைத்திய அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத் தரவிட்டார் (அ-1-218)

## நீதிமன்றக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு - பயங்கர வாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட - குற்றப்பத்திரிகை அவருக்குக் கையளிக்கப் படும் என்று கூறப்பட்டது.

நேற்று திஸநாயகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அங்கு பிரசன்னமாகியிருந்த குற்றப் புலனாய்வுப் பொலிஸார் புதிய தகவல் ஒன்றைத் தெரிவித்தனர்.

திஸநாயகம் மற்றும் இருவர் தொடர்பான விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அச்சுக் கூடம், கொழும்பு கொட்டாஞ்சேனையில் பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு இதுவரை காலமும் இரண்டு பொலிஸார் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர். பின்னர் அது ஒருவராகக் குறைக்கப்பட்டது.

அந்நிலையில் அங்கு - ஆயுதமின்றி - நேற்றுமுன்தினம் இரவு காவலுக்கு இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். இதற்கும் இந்த வழக்கின் சந்தேக நபர்களுக்கும் தொடர்புகள் இருக்கலாம் - என்றும் நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

## பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகளவான வன்முறைகள் இத் தேர்தலில் இடம்பெற வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் பிள்ளையான் குழு மாத்திரம் வன்முறையில் ஈடுபட்டது. அந்தக் குழு தாக்குதல்களை நடத்த ஏனைய கட்சிகள் பதில் தாக்குதல் நடத்தாது, அத்தாக்குதல்களை வாங்கிக் கட்டிக்கொண்டன.

ஆனால், இந்தத் தேர்தலில் நிலைமை வேறு. இந்தத் தேர்தலில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கட்சிகளும் பரஸ்பரம் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

**நாளாந்தம் அதிகரிப்பு**

நாளுக்கு நாள் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகின்றது.

வாக்கெடுப்புக்கு இன்னும் ஓரிரு தினங்கள் இருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் வன்முறைகள் மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

தற்போது வரை இரண்டு மாகாணங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக எமக்கு 156 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவற்றுள் 73 முறைப்பாடுகள் தாக்குதல் சம்பவங்கள் தொடர்புடையவையாகவும், 44 முறைப்பாடுகள் அச்சுறுத்தல் சம்பவங்கள் தொடர்பானவையாகவும் உள்ளன. ஏனைய முறைப்பாடுகள் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் மற்றும் அரசு வாகனங்களைப் பயன்படுத்தல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புடையவை.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸில் செய்யப்படும் முறைப்பாடுகள் குறித்துப் பொலிஸார் நடவடிக்கைகள் எதையும் எடுக்காமல் உள்ளனர் என்றும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தேர்தல் தினத்தன்றும் அதற்கு முந்திய ஓரிரு நாள்களிலும் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக இடம்பெறக்கூடிய வாய்ப்புகள் நிறையவுள்ளன - என்றார். (சி)


வெளிவந்து விற்பனையாகிறது

O/L

வரலாறு

பூபால சிங்கம் புத்தகசாலை.
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



NEW SCIENCE CENTER
யாழ்.

Physics → Heat

ஆரம்பம்:- 23.08.2008 (சனி)
Sat, Sun- 12.30- 1.30pm.
By K.Selvan.
Proprietor- N.Poobalasingam.



திருமண வைபவம் ஒத்திவைப்பு

இன்று (21.08.2008) வியாழக்கிழமை நடைபெற விருந்த எமது மகன் சி.சிவசுப்பிரமணிய சர்மாவின் திருமண வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. திருமணம் இடம்பெறும் திகதி பின்னர் அறியத்தரப் படும்.

க.சிவதாசக்குருக்கள்,
கிருபாகர சிவசுப்பிரமணிய கோயில்
(புதுக்கோயில்), கொக்குவில்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org